




## 1

முகுந்தன் படுக்கைக்குப் போகும் பொழுதுதான் அவன் தாய் சீதா - அந்த விஷயத்தையே சொல்கிறாள்.

''இன்னிக்கு முழுக்க, அவ சாப்பிடவே வரல்லைடா...''

சீதாவின் முகத்தில் கவலைகள் - பூகோள வரைபடம் மாதிரி...

முகுந்தன், புருவத்தை சுருக்குகிறான்.

''ஏன், உடம்பு சரியில்லையா...?''

''தெரியல்லையே... என்கிட்டத்தான் பேசவே மாட்டேங்கறா. மாமியார்ங்கற பயமா.. என்னென்னே தெரியல்லே... லல்லுவை அனுப்பி விசாரிக்க சொன்னேன். என்னமோ அவகிட்ட இங்கிலீஷ்லே சொன்னாளாம்.''

இதைச் சொல்லிவிட்டு, அவள், லல்லுவைத் தேடுகிறாள்.

''லல்லூ''

''இதோ, இங்கே இருக்கேன்மா..''

''உம். உங்க அண்ணி, உன்கிட்ட என்னவோ இங்கிலீஷ்லே சொன்னாள்னு சொன்னியே... என்னது அது...''

லல்லு - இதற்கு உடனடியாகப் பதிலளிக்கவில்லை. தாயை ஒருமுறை அதட்டுவது போலப் பார்த்துவிட்டு, குனிந்து கொள்கிறாள்.

முகுந்தன்தான் தூண்டிவிட வேண்டியிருக்கிறது.

''அண்ணிகிட்டே நீ என்ன பேசினே லல்லு...?''

''சாப்பிட வாங்கன்னு கூப்பிட்டேன்.''

''உம்...''

'' 'டோண்ட் டிஸ்டர்ப் மீ'-ன்னு சொன்னாங்க.''

''ஓ...''

''அப்புறம் நான் - 'நீங்க சாப்பிடாம இருந்தா அண்ணா வந்து எங்களைத்தான் திட்டுவான். சாப்பிட வாங்க'ன்னு சொன்னேன். அவங்க புஸ்தகத்தை விட்டு, கண்ணை, அந்தண்டை, இந்தண்டை திருப்பலை. கிட்டப்போய் தோளைத் தொட்டு, 'எங்க அம்மா சமையல் ஜோராயிருக்கும். கவலைப்படாம வாங்க அண்ணி'ன்னு அழைச்சேன். அதுக்கு, என் கைய 'வெடுக்'குனு தள்ளி விட்டுட்டு 'மைண்ட் யுவர் பிஸினஸ்'னு அதட்டலா சொல்லிட்டாங்க. அப்புறம் நான் உன் ரூம் பக்கம் போகவே இல்லேண்ணா...''

இதைச் சொல்லும் பொழுதே லல்லுவின் காது மடல்கள் சிவக்கின்றன. மெல்லிய உதடு, கீற்றாகத் துடிக்க அவள் விழிகளில் கரையிட்ட நீரை, மிக சாமர்த்தியமாக மறைத்துக் கொள்கிறாள்.

முகுந்தனுக்குமே இதைக் கேட்டதும் குப்'பென முகம் சிவக்கிறது.



லல்லு ஒன்றும் பச்சைக் குழந்தையில்லையே - அதட்டி விரட்டினால் புரியாமல் விழிக்க...?

பதினைந்து வயசாகிறது. பத்தாம் வகுப்பு படிக்கிறாள். இத்தனை நாளும், அந்த வீட்டுக்கு அண்ணி எப்பொழுது வரப் போகிறாள் என்கிற கற்பனையிலேயே அதிக நேரத்தை செலவிட்டவள் அவள்.

வந்தவள் வந்த மூன்றாம் நாளே இவளிடம் எரிந்து விழுந்தால் கோபம் வராதா?

''அண்ணி வந்தவுடன் சேர்ந்து அனுபவிக்க வேண்டும் என அவள் எத்தனை விஷயங்களை சேமித்து வைத்திருக்கிறாள்?

''அண்ணி, நான், வித்யாக்கா - மூணு பேருமா சினிமாவுக்குப் போகணும்...''

''அப்புறம், மொட்டை மாடியில தண்ணி தெளிச்சு, சாயந்திர நேரத்துல, ஜிலுஜிலுன்னு காத்து வாங்கிட்டே கதை பேசணும்.''

''வித்யாக்கா என் கையில மெஹந்தி இட்டு விட்டாளே அது மாதிரி, அண்ணி கையிலேயும் இட்டுவிடச் சொல்லணும்.''

''வரப் போற தீபாவளிக்கு நான், அண்ணி, வித்யாக்கா மூணு பேரும் ஒரே கலர்லே புடவை எடுத்துப்போம்.''

''வித்யாக்காவை பாடச் சொல்லிட்டு நான், அண்ணி மடியில தலைய வச்சுட்டு ஆனந்தமா ரசிக்கணும்.''

சின்னதும், பெரிதுமாய் இப்படி எத்தனை ஆசைகள்?

முகுந்தனின் கல்யாணத்தின் போதே இந்த ஆசைகள் லேசாகத் தளர ஆரம்பித்து விட்டன.

இப்பொழுது கூட நன்றாக நினைவிருக்கிறது.

முகூர்த்த நேரத்தில், அவள் குறும்பாய் மாப்பிள்ளை முகுந்தனின் அங்கவஸ்திரத்தையும், மணமகள் சந்தியாவின் புடவைத் தலைப்பையும் சேர்த்து முடிச்சுப்போட முனைந்தபோது 'சட்'டெனத் திரும்பிப் பார்த்த சந்தியா, சிடுசிடுப்பான குரலில் கூறினாள்:

'இந்தா, இதையெல்லாம் என்கிட்ட வச்சுக்காதே... நகரு...'

அத்தனைபேர் எதிரிலும் முகம் சுண்டிப்போய் விட்டது லல்லுவுக்கு.

அதற்குப்பிறகு, அவள் வெகுநேரம் வரையில் அந்தப் பக்கம் போகவேயில்லை. முகுந்தன்தான் புகைப்படத்தில் தன் பக்கத்தில் நிற்பதற்காக லல்லுவைக் கூப்பிட்டான்.

''லல்லு... நீ அண்ணி பக்கம் நில்லு. அம்மா என் பக்கம் நிக்கட்டும்.''

இப்படி அவன் சொன்ன போது, பிடிவாதமாக மறுத்தாள் அவள்.

''வேண்டாம் வேண்டாம். அம்மாவே அந்தப் பக்கம் நிற்கட்டும். நான் இந்தப் பக்கம் நிக்கறேன்.''

அந்தக் கணம், யாராவது அவளை அழைத்து 'ஏன், என்ன விஷயம்?' என்று விசாரித்திருந்தால், 'ஓ'வென அழுதிருப்பாள்.



அப்படியொரு முறை அண்ணியிடம் தாவணித் தலைப்பு நிறைய வாங்கிக் கட்டிக் கொண்டும், இன்று மறுபடியும் அவள் போய் பேசியதே பெரிய விஷயம்.

முகுந்தன் தங்கையின் தலையை வருடிக் கொடுக்கிறான்.

''அதுக்குத்தான் சொன்னேன், கல்யாணமே வேண்டாம்னு... கேட்டீங்களா? ஆள் ஆளுக்கு ஒரு மூலையில் நின்னுட்டு, ஒப்பாரி வச்சீங்க. அதுவும், அம்மா 'இந்த ஜோஸியரை' நம்பி இந்த மாசம் என் கல்யாணம் நடக்கலையின்னா அப்புறம் பத்து வருஷத்துக்கு நடக்காதுன்னு வேற புலம்பினா... இப்பப் பார்த்தீங்களா...?''

முகுந்தன் 'இந்த ஜோஸியர்' என்று சுட்டிக்காட்டியது வித்யாவை...

அவள், பொங்கும் சிரிப்பை அடக்கியபடி மோட்டு வளையை வெறிக்கிறாள்.

உண்மையிலேயே, வித்யா இந்த அளவுக்கு தார்குச்சி போடாமல் இருந்திருந்தால், முகுந்தனின் கல்யாணம் நடந்தேயிருக்காது.

சீதாவுக்கு அவளது ஜோஸியத்தில் அலாதி நம்பிக்கை.

ஜோஸியத்தில் மட்டுமில்லை. அவள் மீதே ஏகப்பட்ட நம்பிக்கை.

வித்யாவுக்கு பாட்டு தெரியும். வாய்க்கு ருசியாக சமைக்கத் தெரியும். வீட்டை அழகாக வைத்துக் கொள்ளத் தெரியும். யாராலேயும் எளிதில் தீர்க்க முடியாத பிரச்சினைகளை எல்லாம் நிமிஷமாய் தீர்க்கத் தெரியும்.

சீதா அடிக்கடி சொல்வாள்.

''இப்படி வெட்டு ஒண்ணு துண்டு ரெண்டாப் பேசறியேடி வித்யா...! உன வழக்குல மாத்திரம் எண்டி தோத்துட்டே?''

''நான் தோத்துட்டதா யார் சொன்னாங்கம்மா...? நீங்க தோல்வின்னு நினைக்கறதே எனக்கு வெற்றியா இருக்கலாம் இல்லையா?''

இந்த வித்யாவின் கதை தனி. அவள் இந்தக் குடும்பத்துடன் சேர்ந்திருப்பது அவள் செய்த பாக்யமா ... இல்லை... இந்தக் குடும்பம் செய்த பாக்கியமா என்று அடிக்கடி இந்த விட்டில் சர்ச்சை கிளம்பும்.

இப்போப்பட்ட வித்யா தான் சொன்னாள்.

''இந்த தை மாசத்துக்குள்ளே முகுந்தனோட கல்யாணம் நடந்தாத்தான் உண்டு. இல்லாட்டா இந்த வருஷமில்லே.. இன்னும் பத்து வருஷத்துக்கு இவனுக்கு கல்யாண யோகம் கிடையாது.''

சீதா அலறிப் புடைத்துக் கொண்டு அவனது ஜாதகக் கட்டைத் தூக்கி தனது புருஷன் கையில் கொடுத்தாள்.

''என்ன பண்ணுவீங்களோ எது பண்ணுவீங்களோ தெரியாது. வரப்போற தைக்குள்ளே இந்த வீட்டுக்கு மருமக வந்தாகணும் ஆமா...''

''இவன் ஜாதகத்தை பையில போட்டுக்கிட்டு என்னை வீடு வீடா ஏறியிறங்கச் சொல்றியா சீதா...?''



ராகவன் அப்பாவித்தனமாய் கேட்டார்.

ராகவனுக்கு மார்க்கெட்டுக்குப் போய் அரை கிலோ, கத்திரிக்காய் வாங்கக் கூடத் தெரியாது. மருமகளையா தேர்ந்தெடுக்க முடியும் இவரால்...?

குடும்பத்துக்குப் பெரிய மனிதர் என்கிற பெயர் தானே தவிர எல்லாப் பொறுப்பும் வித்யாவை சேர்ந்தது தான்.

வித்யாதான் சொன்னாள்:

''பேசாம ஒண்ணு செய்யுங்க அங்கிள்! நம்ம முகுந்தனோட ஜாதகத்தை எடுத்திட்டுப் போய், நுங்கம்பாக்கம் பிள்ளையார் கோவில்லே பதிவு செஞ்சிட்டு வாங்க. அங்கே பொண்ணு வீட்டுக்காரங்க நிறைய பேர் வந்து, தங்களோட பொண்ணுக்கு எத்த ஜாதகங்கள் இருந்தா எடுத்திட்டுப்போய் லெட்டர் போடுவாங்க. பரஸ்பரம் ரெண்டு வீட்டுலேயும் பொருத்தம் பார்த்து எல்லாம் ஒத்து வந்ததுன்னா அடுத்தாப்பல கல்யாணம்தான்.''

''இதை நீ ஏன் முன்னாடியே சொல்லலே வித்யா...? தெரிஞ்சிருந்தா என் ஜாதகத்தையே பதிவு பண்ணியிருப்பேன்.''

ராகவன் மனைவியை அருகில் வைத்துக் கொண்டு வித்யாவைப் பார்த்து கண் சிமிட்ட...

''ஏன் இப்பத் தான் என்ன குறைஞ்சு போச்சாம்? போய் ரிஜிஸ்தர் பண்ணிட்டு வாங்க. அம்பது வயசும், வழுக்கைத் தலையும் ஒரு பெரிய குறையா என்ன? மாசம்

பன்னிரண்டாயிரம் ரூபா சம்பாதிக்கிறீங்க, ரெண்டு குழந்தைகளைப் பெத்து, உங்க ஆண்மைய நிரூபிச்சிருக்கீங்க. இந்த மாதிரி மாப்பிள்ளை கிடைக்க கொடுத்து வச்சிருக்கணுமே...''

சீதா அவரை இடைவெட்டிப் பேசி சிரித்தாள்.

கடைசியில், அந்தப் பிள்ளையார் கோவிலில் போய், முகுந்தனின் பெயரைப் பதிவு செய்து விட்டு வந்ததே வித்யாதான்.

பதிவு செய்த பத்தாம் நாள், ஒரு ஞாயிற்றுக்கிழமை காலை பத்து மணி சுமாருக்கு - அந்தக் குடும்பமே ஆனந்தமாய் விடுமுறை ஸ்பெஷல் சாப்பாட்டை ரசித்து சாப்பிட்டுக் கொண்டிருந்த நேரத்தில் வாசல் பக்க காலிங்பெல் ஒலித்தது.

லல்லு ஓடிப்போய் கதவைத் திறந்தாள்.

கோட்டும் சூட்டுமாய் கையில் 'வாக்கிங் ஸ்டிக்'குடன் கன கம்பீரமாய் ஒரு மனிதர் நின்று புன்னகைத்தார்.

''மிஸ்டர் முகுந்தன் வீடு... இதானே..?''

''ஆமா... நீங்க யாரு...?''

லல்லுவுக்கு அவசரம் - சாதத்தின் மீது அம்மா ஊற்றியிருந்த வெங்காய சாம்பார் சூடு ஆறி விடப் போகிறதே என்று!

''மகாலிங்கபுர கோவில்லே... மிஸ்டர் முகுந்தனோட அட்ரஸ், ஜாதகம் பார்த்தேன். அது விஷயமாப் பேசிட்டுப்போக... உம்... இதையெல்லாம் உன்கிட்ட எதுக்கு நான்



சொல்றேன்? வீட்டுல பெரியவங்க இல்லே...? அவங்களைக் கூப்பிடு.''

அண்ணனுக்குப் பெண் கொடுக்க ஒருவர் வந்திருக்கிறார் என்கிற சந்தோஷத்தில் அவர் தன்னை இளப்பமாகப் பேசியது கூடப் பொருட்டாகத் தெரியவில்லை லல்லுவுக்கு.

பாவாடை தாவணி விசிற, உட்பக்கம் ஓடினாள்.

''அண்ணனோட கல்யாண விஷயமாப்பேச ஒருத்தர் வந்திருக்கார்ப்பா... வாசல்லே பெரிய்ய கார் நிக்கறது. ஆளைப் பார்த்தா சினிமாவுல வர்ற - கோடீஸ்வர அப்பா மாதிரி இருக்கார்.''

ராகவன், சாம்பார் சாதத்தை உருட்டி வாயில் போட்டவாறே அலட்சியமாகச் சொன்னார்.

''அவர் அட்ரஸ் மாறி வந்திருப்பார். நம்ம வீட்டுக்குப் பொண்ணு கொடுக்க வர்ற மனுஷன், கதர் சட்டை போட்டுட்டு, ஆயிரத்து தொள்ளாயிரத்து முப்பதாம் வருஷ சைக்கிள்லே வந்து இறங்குவாரு... போய், அட்ரஸ் என்னன்னு கேட்டுட்டு வா... போ...''

சீதா தான் விரட்டினாள்.

''ஏன், நம்ம முகுந்தனோட படிப்புக்கும், புத்திசாலித்தனத்துக்கும் பெரிய இடத்து சம்பந்தம் எதுவும் வரக்கூடாதா என்ன... எழுந்துபோய்த்தான் விசாரியுங்களேன். வெங்காய சாம்பார் எங்கே போயிடப் போறது.''

மனசேயில்லாமல் தான் எழுந்து போனார் ராகவன்.

ஆனால் -

அடுத்த அரை மணி நேரத்தில், திறந்த வாயை மூட மறந்து உட்கார்ந்து விட்டார்,

வந்தவர் மூச்சு விடாமல் பேசி இவரை அப்படியே அசத்தி விட்டார்.

''நாங்க பார்த்த வரைக்கும் ஜாதகம் ஃபஸ்ட் கிளாஸாப் பொருந்தியிருக்கு. எனக்கு ஒரே பொண்ணு... செல்லப் பொண்ணு... எஸ்டேட் இருக்கு. நீலகிரியிலே அருமையான காபிக்கொட்டை, திருநெல்வேலி, தஞ்சாவூரிலே இங்கேயெல்லாம் ஆயிரக் கணக்கான ஏக்கரா நிலம் சொந்தம். பொண்ணு பி.எஸ்.ஸி., படிச்சிருக்கா... அதுக்கு மேல படிக்கணும்கற ஆசைதான் அவளுக்கு... நான்தான் வேண்டாம்னு நிறுத்திட்டேன். காலா காலத்துல கல்யாணத்தைப் பண்ணிப் பார்க்கணும்கற ஆசைதான். உங்களுக்கு சம்மதமானா, போட்டோவைக் காமிக்கறேன். நீங்க உங்க பிள்ளையின் போட்டோ இருந்தாக் கொடுங்க. அதுக்கு மேல, பொண்ணு பார்த்து, நிச்சயம் பண்ணி கல்யாணத்தை முடிக்கறதை எல்லாம் 'வித் இன் எ மினிட்' முடிச்சுடலாம்.''

அவர் விரலைச் சொடுக்கினார்.

வித்யா, காபி கொண்டு வர ஓடினாள். சீதா அவசரமாய் பூஜை அலமாரியில் விளக்கேற்றி வைத்து, கன்னத்தில் போட்டுக் கொண்டாள்.

லல்லு, பரபரவென தாவணியின் முந்தானை ஓரத்தை ஆள்காட்டி விரலில் சுருட்டி பிரித்தபடியே, தனது வருங்கால



அண்ணியைப் பற்றிய கற்பனையில் ஆழ்ந்தாள்.

முகுந்தன் சாப்பிட்டு விட்டு, கம்பீரமாய் வெளியே வந்தான்.

மகனை, வந்தவருக்கு ராகவன், அறிமுகப்படுத்த அவர், தனது மகளின் புகைப்படத்தை எடுத்து, அவனிடம் காண்பிக்கிறார்.

''பேரு சந்தியா... நல்ல நிறம், ஜாடையெல்லாம் அவ அம்மாளைப் போல... குணம் மாத்திரம் என்னை மாதிரி... ஹெஹ்ஹே.''

முகுந்தன் தலையாட்டினான். சீதாவும், வித்யாவும், லல்லுவும் ஒருத்தர் மீது ஒருத்தர் மோதாத குறையாகப் புகைப்படத்தை எட்டி எட்டிப் பார்த்தனர்.

அடுத்த ஒரு நல்ல நாளில் பெண்ணைப் போய் பார்த்து விட்டு வந்து விட்டனர்.

அதற்குப் பிறகுதான் ஒரு பிரச்னையை முகுந்தன் எழுப்பினான்.

''பொண்ணு ரொம்பவும் அலட்டற டைப்போன்னு எனக்கு சந்தேகமாயிருக்கும்மா... கொஞ்சம் மாடர்ன் டைப்னு கூட தோணறது.''

''உம்...''

சீதா முழிக்க, வித்யா நறுக்குத் தெறித்தாற் போலச் சொன்னாள்.

''கல்யாணத்துக்கு முன்னால எந்தப் பொண்ணைப் பார்த்தாலும் கர்வக்காரி

மாதிரிதான் இருக்கும். கல்யாணமாகாத பிள்ளைகள் முகத்துல அசட்டுக்களை சொட்டலையா? அது மாதிரி.. அதை விடு... 'மாடர்ன் டைப்' என்ன மாடர்ன் டைப்? நீ பம்பாய்க்கு வந்திருக்கியா?''

''இல்லே?''

''கல்கத்தாவுக்குப் போயிருக்கியா?''

''இல்லே...''

''குறைந்தபட்சம் லேடீஸ் காலேஜு பக்கமாவது போயிருக்கியா...? அதையெல்லாம் கம்பேர் பண்ணினா என்ன மாடர்ன்? உடம்பு முழுக்க ஒரு புடவைய சுத்திட்டிருந்தா இல்லே?''

''சுத்திட்டிருக்கிற மாதிரியும் இருந்தது. இல்லாதது மாதிரியும் இருந்தது வித்யா...''

''குறைந்தபட்சம் அந்த சந்தேகமாவது இருந்தது இல்லே? ஆளைவிடு... நம்ம வீட்டுக்கு அவ வரட்டும் முகுந்தா... எல்லாம் தன்னாலே சரியாப் போயிடும்.''

''அவ கான்வெண்ட்லே படிச்சிருக்கா போல இருக்கே வித்யா?''

''ஸோ வாட்? அவளைவிட நீ பெரிய படிப்பு படிச்சிருக்கே... இல்லே?''

''அந்த மனுஷரைப் பார்த்தா நம்ம குடும்பத்தோட ஒட்டுவார்னு தோணலை வித்து...''

''டேய் மாங்கா மடையா...! அந்த மனுஷர் கழுத்துலேயா தாலி கட்டப் போறே? அவளுக்கும் நமக்கும் நல்லவிதமான உறவு



இருந்தா சந்தோஷம் இல்லையா... அதைவிட சந்தோஷம்.''

இப்படி ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு பதில் தயாராக வைத்திருந்தாள்.

இன்று கல்யாணம் முடிந்து மூன்றாவது நாள். முதல் இரண்டு நாட்களும் பிள்ளை வீட்டாரும், பெண் வீட்டாரும் விருந்து வைத்துக் கொள்ளவும், குலதெய்வமான திருப்பதி பெருமாளை தரிசனம் செய்து விட்டு வரவுமே நேரம் சரியாக இருந்தது.

இன்றுதான் இவர்களது அன்றாட வாழ்க்கை துவக்கம்.

முகுந்தன் ஆபீசுக்குப் போகும்முன் பக்கத்து வீட்டுச் சிறுவன் ஓடி வந்தான்.

''அங்கிள் உங்களுக்கு போன்...''

''எனக்கா? எனக்கு போன் பண்ண யாருமே இல்லையேடா...''

''நோ... நோ... மிஸ்டர் நரசிம்மன்னு சொன்னார். 'போய் மாப்பிள்ளை முகுந்தனைக் கூப்பிடு'ன்னு சொன்னார்...''

முகுந்தன் புருவத்தை சுருக்கியபடி தன் தாயைப் பார்த்தான்.

''ஆமா... பக்கத்துல போன் ஏதாவது இருந்தா நம்பர் கொடுங்கன்னு சம்பந்தி கேட்டார். நான்தான்...''

சீதா சிரித்தபடி சொல்ல -

தலையில் ' அடித்தபடியே பக்கத்து வீட்டுக்குப்போய் விட்டு வந்தவன், சந்தியா தன் அருகில் நிற்பதையே மறந்து தாயிடம்

சொல்லிக் கொண்டே போனான்.

''மிஸ்டர் நரசிம்மன் எனக்கும் அவர் பொண்ணுக்கும் ஹனிமூனுக்காக காஷ்மீருக்கு ரெண்டு பிளேன் டிக்கட் வாங்கியிருக்காராம். 'இப்ப எங்க ஆபீஸ்லே லீவு எடுக்க முடியாது மாமா'ன்னு சொல்லிட்டேன்.'

அப்பொழுதே சந்தியாவின் முகம் தொங்கி விட்டது.

இப்பொழுது காரணம் புரியாமல் தவித்தபடி பால் தம்ளருடன் மூடியேறுகிறான் அவன்.

வித்யா, சிரிப்பை அடக்க முயற்சித்து தோற்றுப் போகிறாள்.

இப்பொழுது இந்த வித்யாவைப் பற்றிச் சொல்லியே ஆக வேண்டும்.

யாரிவள்?

ராகவனது குடும்பத்துக்கும் இவளுக்கும் என்ன உறவு?

இந்தக் கேள்வி, அந்த தெருவாசிகளுக்கு மட்டுமில்லை - முகுந்தனின் கல்யாணத்தின் பொழுது பெண் வீட்டைச் சேர்ந்த அத்தனை பேருக்கும் இந்த கேள்வி எழுந்ததுதான்.

''தாலி முடியறதுக்காக சம்பந்தியம்மா ஒரு பொண்ணை அழைச்சாளே... அவதான் வீட்டுக்கு மூத்த பொண்ணா?''

''உன்னை மாதிரி தான் நிறைய பேர் நினைச்சுட்டிருக்காங்க... அவ, அந்த வீட்டுப் பொண்ணு இல்லே. சம்பந்தியம்மாவுக்கு மாப்பிள்ளைதான் மூத்த பிள்ளை. அடுத்தது...



ஒரு பாவாடை தாவணி அலையறதே... அது, ஒரு பொண்ணு, ஒரு பிள்ளைதான் கச்சிதமா!''

''அப்ப இவ...?''

''தெரியல்லையே? முகுந்தனோட அப்பாவை அங்கிள்னு அழைக்கறா... அம்மாவை மட்டும் 'அம்மா'ன்னு கூப்பிடறா... ஆனா... ஒண்ணு மட்டும் நிச்சயமா சொல்வேன். அந்தக் குடும்பத்துக்கே ஆல்இன் ஆல் இவதான். மிஸ்டர் ராகவனோ, அவங்க மனைவியோ - சம்பந்தி மனுஷாள்கிட்ட ஏதாவது பேசறதானாக்கூட, இவளைக் கேட்டுட்டுத்தான் பேசறாங்க.''

''ஆங்?''

''அட, ஆமாங்கறேன்...''

இப்படிப் பலராலும் பேசப்படும் வித்யா...

ராகவனின் மிக நெருங்கிய சினேகிதரின் ஒரே மகள்.

பம்பாயிலேயே நிரந்தரமாகத் தங்கிவிட்ட அந்த நண்பர் தாயில்லாப் பெண்ணான வித்யாவை வளர்க்கும் பொறுப்பை, சீதா - ராகவன் தம்பதியிடம் ஒப்படைத்திருந்தார். அந்த சமயத்தில் ராகவனும் பம்பாய் வாசியாக இருந்ததால், வித்யாவை வளர்ப்பதில் அவர்களுக்கு எந்தவித சிரமமும் தெரிய வில்லை. மேலும் ராகவன் - சீதாவுக்கு திருமணமாகி ஐந்து வருடங்களாகியும் குழந்தைப்பேறு இல்லாததால் வித்யா அந்த வீட்டுக்கு ஒரு வரப்பிரசாதமாகவே திகழ்ந்தாள்.

இவர்களிடம் வரும் பொழுது வித்யாவுக்கு ஐந்து வயசு. இவள் வந்து சேர்ந்த அடுத்த வருடமே முகுந்தன் பிறந்தான்.

வித்யாவின் தந்தை, மகளை நண்பனிடம் ஒப்படைத்ததோடு தன் கடமை தீர்ந்து விட்டதாக விட்டுவிடவில்லை. அடிக்கடி வந்து பார்ப்பார்.

வித்யா எட்டாம் வகுப்பில் படிக்கும் பொழுதுதான்.,ராகவனுக்கு சென்னைக்கு மாற்றலாகியது... இவர்களுடன் இங்கே வந்தவள் சென்னைவாசியானாள்.

இவள் கல்லூரியில் அடியெடுத்து வைத்தபோதுதான் தந்தையிடமிருந்து கடிதம் வந்தது.

"ராகவா... கொஞ்ச நாட்களாக உடல் நலம் சரியில்லை எனக்கு. டாக்டர்கள் இதயம் மிகவும் பலவீனமாக இருப்பதாகச் சொல்கிறார்கள். ரொம்பவும் மோசமான நிலையை அடைவதற்கு முன், வித்யாவின் கல்யாணத்தைப் பார்த்துவிட வேண்டுமென்று ஆசைப்படுகிறேன். இத்தனை நாளும் இவளை வளர்த்த நீதான் இவளுக்குத் தகுந்த வரனையும் பார்க்க வேண்டும். 'உங்கள் சிநேகிதருக்கு அத்தனை சாமர்த்தியம் ஏது?' என்று சீதா சொல்வது என்காதில் விழுகிறது. கவலைப்படாதே... நான் நாளை மறுநாள் கிளம்பி சென்னை வருகிறேன். இரண்டு பேருமாய் சேர்ந்து நல்ல மாப்பிள்ளையாகத் தேடிப் பிடிப்போம்."

ராகவன், அன்றே - வித்யாவுக்காக வரன்



தேடக் கிளம்பி விட்டார். நண்பன் வந்ததும், இரண்டு பேருமாய் சேர்ந்து அலைந்தார்கள்.

கடைசியில் பிடித்த வரன்தான் விஸ்வநாத்.

மாப்பிள்ளை பெரிய இடத்துப் பையன், பெங்களூரில் ஒரு நிறுவனத்தின் உயர் அதிகாரி என்றார்கள். ஆள் பார்க்க அட்டகாசமாகத்தான் இருந்தான். வித்யாவின் உயரத்துக்கும் பருமனுக்கும் கச்சிதமாய் பொருந்தினான்.

கல்யாணத்துக்கு முதல் நாளும், கல்யாணத்தன்றும் அவன் பேசிய வார்த்தைகளை விரல் விட்டு எண்ணி விடலாம்.

கல்யாணத்துக்கு மறுநாள் மாப்பிள்ளை வீட்டார் வித்யாவுடன் கிளம்பத் தயாராகிக் கொண்டிருக்கையில் ...

பொழுதே புலராத விடிகாலைப் பொழுதில் - வித்யா, சீதாவைத் தேடிக் கொண்டு முதலிரவு அறையிலிருந்து வெளிவந்தாள்.

கல்யாண அலைச்சலில் ஓய்ந்து போய்க் கிடந்த சீதாவை, மெள்ள தோளைத் தொட்டு எழுப்பினாள்.

"என்னடீ..."

சீதா வாரிச் சுருட்டிக் கொண்டு எழுந்தாள்.

வித்யாவின் முகத்தில், வழக்கமான புன்னகையைப் பார்க்காததே அவளுக்கு "சொரேர்" என்றது...

ஆனால் அவளோ - அலட்டிக் கொள்ளாமல் நிதானமாகச் சொன்னாள்.

"இது சரிப்பட்டு வரும்னு எனக்குத் தோணலைம்மா..."

"என்ன சொல்றே வித்யா...?"

"அவருக்கு மூளை வளர்ச்சி - ஒரு சராசரி மனுஷனுடையது போல இல்லை. ஒரு கோட்டையும் சூட்டையும் மாட்டி உங்க எல்லார் முன்னாடியும் 'ஜம்'முனு நிக்க வச்சுட்டாங்க அவங்க வீட்டுல. கம்பெனி ஆபீஸர் போஸ்ட்... இதெல்லாம் வெறும் கப்ஸா."

"ஐயய்யோ... இப்ப நான் என்னடீ பண்ணுவேன்?"

சீதா அலறத் தொடங்க, வித்யா, அவளது வாயைப் பொத்தினாள்.

"ஷ்... சத்தம் போடாதீங்க. அப்பா காதிலேயோ அங்கிள் காதிலேயோ விழுந்து வைக்கப் போறது."

"அவங்களுக்கு விஷயம் தெரியாம எப்படி வித்யா மூடி மறைக்க முடியும்? நான் இப்பவே போய் சம்பந்தி அம்மாகிட்டே கேட்கிறேன்."

அவிழ்ந்து தொங்கும் கூந்தலை அள்ளி முடிந்தவாறு கிளம்பிய சீதாவின் தோளைப் பிடித்து அழுத்தி, உட்கார வைத்தாள் வித்யா.

"இப்ப நீங்க வந்து என் மாமியாரைக் கேட்கறதாலே நேத்து நடந்த கல்யாணம், நடக்காத ஒண்ணா ஆயிடுமா? அநாவசிய ரகளைதான் மிஞ்சும். இப்ப இந்த கல்யாணத்துக்கு நான் ஒத்துகிட்டதே எங்க அப்பாவோட மன திருப்திக்காகத்தான்.



ஏற்கனவே, 'ஹார்ட் வீக் பேஷண்ட்'டானவங்க அப்பா. இந்த விஷயத்தைக் கேள்விபட்டவுடனே 'பொக்'குனு போயிட்டாரானா என்ன செய்யறது?"

வித்யாவின் இந்தக் கேள்வி, சீதாவின் கால்களைப் பின்ன வைத்தது.

"இப்ப என்னடீ செய்யறது?"

"என்ன செய்யறது? நேத்தும் முந்தா நாளும் மாப்பிள்ளையோட வண்டவாளம் தெரியாம இருக்கறதுக்காக அவரோட அக்காவும், அம்மாவும் அவரோட ஈஷிகிட்டே இருந்தாளுங்களே - இன்னிக்கு அவங்களுக்குப் பதிலா, நான் ஒட்டிக்கறேன்.

"வித்யா..."

மேற்கொண்டு பேச முடியாமல், சீதா, குலுங்கிக் குலுங்கி அழுதாள். வித்யாவை, அவள் வயிற்றில் சுமக்கவில்லையே தவிர வளர்த்ததெல்லாம் அவள்தானே?

கண்ணிமைக்குள் வைத்து வளர்த்து விட்டு, இப்படியொரு பைத்தியத்துக்குக் கொண்டு போய் கொடுத்த தங்களது முட்டாள்தனத்தை எண்ணியெண்ணி அழுதாள்.

கல்யாணக் கூடத்தில் அந்த விடிகாலைப் பொழுதில் டிகிரி காபி குடிக்கும் சுகத்தைப் பற்றிப் பேசிக் கொண்டு வித்யாவின் தந்தையும், ராகவனும்...

தங்கள் அருமைப் பெண்ணின் எதிர்காலமே இருண்டு விட்டதை அறிந்தால் எப்படி துடித்துப் போவார்களோ?

வித்யா, பல் துலக்கி குளித்து விட்டு 'பளிச்'சென ஒரு குங்குமப் பொட்டை சின்னதாய் நெற்றியில் வைத்துக் கொண்டு கூடத்துக்குப் போய் தந்தையையும் ராகவனையும் தரையில் விழுந்து வணங்கினாள்.

''தீர்க்க சுமங்கலியா இரும்மா.''

சொல்லும் பொழுதே பெற்றவரின் கண்களில் நீர் தளும்பியது. ராகவன் மேல்துண்டால் முகத்தைத் துடைக்கும் சாக்கில் அழுகையை மறைத்துக் கொண்டார்.

''மாப்பிள்ளை எழுந்திருக்கலையாம்மா?''

''இன்னும் இல்லே...''

''எழுந்திருக்கட்டும்... என்ன அவசரம்? டிரெயினுக்கு இன்னும் நிறைய நேரமிருக்கு. அம்மா வித்யா! உனக்குத் தேவையான துணிமணிகளை எடுத்து வச்சுட்டியா?''

''அது என்ன பிரமாதம்பா... அப்பவே ரெடியாச்சு. அந்த சூட்கேஸ் தான் என் லக்கேஜ்.''

''எது... அதுவா... அது எப்படிம்மா போதும்? ரெண்டு நாள் பிரயாணத்துக்கே ரெண்டு பெரிய சூட்கேஸ் நிறைய புடவைங்களை மூட்டை கட்டறவ நீ...''

வித்யா தலைகுனிந்து புன்னகைத்தாள்.

''போறும்பா. நான்தான் போன சீக்கிரத்திலே திரும்பி வரப்போறேனே?''

ராகவன் அதிர்ந்தார்.

''என்ன உளர்றே வித்தூ?''



''உளறலே... அங்கிள்! இப்ப மாமியார் வீட்டுக்குப் போனா ஆடி மாசம் என்னை, நம்ம வீட்டுக்கு அழைக்க மாட்டீங்களா? அதைத்தான் சொன்னேன்.''

''ஓ...''

இதற்குப்பின் வித்யா, மளமளவெனக் கிளம்பி விட்டாள். அவளது மாமியாருக்கும், மற்றவர்களுக்கும்தான் அவளது முகத்திலிருந்து எதையுமே கண்டுபிடிக்க முடியாமல் இருந்தது.

விஸ்வநாத் குளித்து முடித்து, பட்டு வேட்டி ஜிப்பா அணிந்து கிளம்பும் வரையில் கூடவே இருந்தாள் வித்யா.

தன் மாமியார், நாத்தனாரைக்கூட நெருங்கவிடவில்லை. ''இருக்கட்டும். நான் பார்த்துக்கிறேன். நீங்கதான் பாவம் இத்தனை நாள் சிரமப்பட்டீங்களே...''

''......''

''என்ன பார்க்கறீங்க? பெரிய கம்பெனியில் ஆபீஸர் கிரேடுன்னாலே - இப்படித்தான். எங்க அங்கிள் கூட ஆபீஸர் தான்... ஆனா, உங்கபிள்ளை மாதிரி வராது. அவர் சாதாரண ஆபீஸர்தான். மூணு வருஷத்துக்கு ஒரு தடவை ஊர்விட்டு ஊர் மாத்திட்டு... இத்தனைக்கும் தனக்கா ஒரு காரியம் செஞ்சுக்க தெரியாது. எல்லாத்துக்கும் நாங்க யாராவது கூட இருந்தேயாகணும். இல்லேன்னா சட்டைப் பொத்தானைக்கூட சரியாப்போட்டுக்காம நிப்பார். ஓவர் டென்ஷன் இருக்கிறவங்களே இப்படித்தான்

பைத்தியக் காரத்தனமா எதையாவது செஞ்சிட்டு முழிப்பாங்க.''

வித்யா பேசியபடியே, புருஷனுக்கு உடை எடுத்துக் கொடுத்தாள். அவன் அதை தாறுமாறாக அணிந்து கொண்ட போது பிடுங்கி, ஒழுங்காய் அணிவித்தபடியே தன் நாத்தனாரைப் பார்த்து சிரித்தாள்.

''உங்க அண்ணா வேடிக்கையான மனுஷர் இல்லே...? போய், ரூம் கதவை சாத்திட்டு வா... எங்க வீட்டு மனுஷங்க யாராவது பார்த்து வைக்கப் போறாங்க.''

சொடுக்கி விட்ட பம்பரம் போல சொன்னபடி கேட்டாள் மாப்பிள்ளையின் அக்கா.

என்னதான் மூடி மறைத்தும், பஸ் கிளம்புகிற சமயத்தில் தனது சுயரூபத்தைக் காட்டிவிட்டான் விஸ்வநாத்.

''மாப்பிள்ளை... போய் லெட்டர் போடுங்க.''

''இதையெல்லாம் அவர்கிட்ட சொல்லணுமாப்பா... நான் எதுக்கு இருக்கேன். ஒரு விஷயம் விடாம எழுதிட மாட்டேன்?''

வித்யா, கணவனைப் பேச விடாமல் தானே பேச - வண்டியில் ஏறிய புகுந்த வீட்டு மனிதர்கள், இந்தக் காட்சியைப் பார்த்துக் கொண்டு உட்கார்ந்திருக்க -

ராகவன், சம்பந்தி மனிதரிடம் சொன்னார்.

''ரெண்டு கூடையிலே இட்லி, புளியோதரை, தயிர் சாதம் எல்லாம் வச்சிருக்கோம் சார்! ஒரு கூடை பஸ்லே



முன்பக்கம் ஏறியிருக்கு. இன்னொன்று பின்னாடி கடைசி சீட் அடியில இருக்கு. பிரைவேட் பஸ் ஆனதாலே கவலையில்லை. இருந்தாலும் ரெண்டையும் யூஸ் பண்ணிக்குங்க.''

''மாமா... மாமா... இட்லியில மௌகாப்பொடி தடவியிருக்கீங்களா?''

'பொதக்'கென்று கேட்டு வைத்தான் விஸ்வநாத்.

''என்னது...?''

ராகவனும், வித்யாவின் தந்தையும் நிலைமையை சுதாரித்துக் கொண்டு நிமிர்வதற்குள்...

''அவர் உங்ககிட்ட ஜோக் அடிக்கிறார் அங்கிள்...'' வித்யா இதைச் சொல்லி முடிப்பதற்கு முன் வண்டி கிளம்பி விட்டது.

வெகு நேரம் வரையில், அப்படியே ஸ்தம்பித்து நின்று விட்டார் வித்யாவைப் பெற்றவர்.

''டேய்... என்னடா அப்படியே நின்னுட்டே...?''

ராகவன் அவரை உலுக்க...

''என் பொண்ணை... என் பொண்ணை... படுகுழியில தள்ளிட்டேன்போல இருக்குடா ராகவா. ஐய்யோ... அந்தப் பையன் கடைசியில பேசினதைப் பார்த்தியோ...''

''சீச்சீ... அவன் ஜோக் அடிக்கிறான்னு வித்யாவே சொல்லலையா... நீ பாட்டுக்கு எதையாவது நினைச்சுட்டு... வாடா

வீட்டுக்குப் போகலாம்.''

''நோ... நோ... ஹி இஸ் மென்டலி டிஸாடர்ட். அவன் பேசறப்ப அந்த கண்ணும், முகமும் போன போக்கைப் பார்த்தியா? எப்படிடா அவன்கூட நாலு வார்த்தை ஒழுங்காப் பேசிப் பார்க்காம முடிவு செஞ்சோம்? இப்பவே ஒரு டாக்சி பிடி. அவங்களைத் தூக்கிட்டுப் போய்...''

அவர் சொல்லி முடிப்பதற்குள், ராகவன் தடுத்து நிறுத்தினார்.

''வித்யா புத்திசாலி. அப்படி ஏதாவது இருந்திருந்தா நேத்து ராத்திரியே அவளுக்கு தெரிஞ்சிருக்கும். நம்மகிட்ட சொல்லாமலா...?''

அவர் சட்டென பேச்சை நிறுத்தி விட்டு மனைவி பக்கம் திரும்பிப் பார்க்க -

அவள் முகம் சிவக்க பிழியப் பிழிய அழுது கொண்டிருந்தாள்.

''என்ன சீதா?''

''காலையில... காலையில... வித்யா என்கிட்ட எல்லாத்தையும் சொல்லிட்டாங்க. மாப்பிள்ளைக்கு மூளை சரியில்லையாம்.''

''இதை ஏண்டி முன்னாலேயே சொல்லலை... முண்டம்?''

ராகவன் காட்டுக் கூச்சல் போட்டார்.

''அவ... அவதாங்க இப்ப சொல்ல வேண்டாம்னு சொன்னா... இப்ப சொன்னா, அப்பா நிலைமை மோசமாயிடும்னு...''

காரில் கிளம்ப வேண்டும் என்று குதித்த



நண்பனை அடக்கி, அன்றிரவே விமானத்தில் கிளம்பி, பெங்களூர் போய்ச் சேர்ந்தார் ராகவன்.

**வி**த்யா விஸ்வநாத்தின் பெற்றோரைக் கேள்வி மேல் கேள்வி கேட்டு குடைந்தெடுத்து விட்டாள்.

''உங்க மகனுக்கு மூளை சரியில்லாதப்ப, எதுக்காக இன்னொரு பொண்ணோட வாழ்க்கையப் பாழடிச்சீங்க? அல்பமா கிடைக்கற பணத்துக்காகவா...?

''இல்லேம்மா... அது வந்து...''

''எப்பலேருந்து இப்படியிருக்கு உங்க மகனுக்கு? சின்ன வயசுலேயிருந்தா, இல்லே இப்ப ஏற்பட்டதா...?''

''இதை பைத்தியம்னு சொல்ல முடியாது வித்யா. பத்து வயசுக்கு மேல மூளை வளரலே. அவன் ஒரு குழந்தை மாதிரி.''

''பொய்! இதை நான் நம்ப மாட்டேன். சட்டைய எப்படி மாட்டிக்கறதுங்கறது கூட தெரியாத உங்க பிள்ளைக்கு சோத்தைக் கண்டாலும், பொண்ணைக் கண்டாலும் அசாத்திய வெறி ஏற்படுதே... ஏன்?''

''இங்கே பாரு வித்யா... அவனுக்கு இந்த சபலங்கள் கொஞ்சம் அதிகம்தான். அவனுக்குன்னு ஒருத்தி வந்துட்டா எல்லாம் சரியாப் போயிடும்னு... நாங்க சொல்லலே... டாக்டர்... டாக்டர் சொன்னாங்க...''

மாமனாராகப்பட்டவர் நடுங்கியபடியே

சொன்னார். உண்மையிலேயே, மூளை சரியில்லாத தன் மகனுக்கு திருமணம் செய்து வைப்பதில் அவருக்குத் துளியும் சம்மதமில்லைதான். பெண்டாட்டி பெண்களின் பிடுங்கல் தாளாமல் இந்த அநியாயத்துக்கு இசைந்தார்.

வருகிற பெண் அப்பாவியாய் இருப்பாள். அவளை அதட்டி உருட்டி,அந்த வீட்டு விவகாரம் வெளியே பரவாதபடி பார்த்துக் கொள்ளலாம் என்று நினைத்த அந்த வீட்டுப் பெண்களின் எண்ணத்தில் இடியிறங்கினாற்போல இருந்தது வித்யாவின் வருகை.

**ரா**கவன் அந்த வீட்டுக்குள் நுழைந்த போது ஒரு சின்ன யுத்தமே நடந்து கொண்டிருந்தது.

விஸ்வநாத்தின் தாய், சாமி வந்தவள் போலக் கத்திக் கொண்டிருந்தாள்.

''ஆமாடி... என் மகன் பைத்தியம்தான். சோறுதான் எங்களாலே வடிச்சுக் கொட்ட முடியறதே தவிர தெருவுல போற பொண்ணுங்ககிட்ட இவன் எக்குத்தப்பா நடந்துக்கறதை தவிர்க்க முடியல்லே. இவனுக்கு ஒரு பொண்ணைக் கட்டி வச்சா, வெளியிடத்துலேயிருந்து வம்பு வராதுன்னுதான் உன்னைக்கட்டி வச்சோம். இப்ப என்ன சொல்றே? இருக்கறதானா இரு- இல்லே - பிடிக்கலைன்னா தாலிய அறுத்துக் கொடுத்துட்டுப் போயேன். என்னத்துக்காக



வக்கீல் மாதிரி கிராஸ் கொஸ்டின் எல்லாம் கேட்டுட்டிருக்கே?''

''அறுத்துக் கொடுக்கறதோட தீர்ந்து போற சமாச்சாரம் இல்லே மேடம்! இது என்னோட வாழ்க்கை பிரச்னை. 'பெரிய ஜமீன் பரம்பரை, பிள்ளை ஏதோ வாயில நுழையாத கம்பெனி ஒண்ணுல தடபுடலான ஆபீஸர்'னு சொல்லி எங்க அப்பாட்ட ஒரு லட்சம் ரூபா வரதட்சணைப் பணமா வாங்கியிருக்கீங்க. இதைத்தவிர கல்யாணச் செலவு ஒரு லட்ச ரூபா... இதுரெண்டையும் சேர்த்தா ரெண்டு லட்சம். தவிர என்னோட வாழ்க்கைய நாசமாக்கினதுக்காக நஷ்டஈடு எவ்வளவு போட்டுக்கலாம்? கோடி ரூபா நஷ்டஈடாக் கொடுத்தாலும் போன சந்தோஷம் திரும்பி வரப் போறதில்லே. சரி... உங்களுக்கும் வேண்டாம் எனக்கும் வேண்டாம். பத்து லட்ச ரூபா நஷ்டஈடு கொடுங்க போதும்... பத்தும், ரெண்டும், பன்னிரண்டு. நீங்களா கொடுக்கறீங்களா... இல்லே கோர்ட் வரைக்கும் போகவா...?''

''வித்யா...''

குரல் கேட்டுத் திரும்பியவள் ராகவனைக் கண்டதும் வியப்பில் புருவத்தை உயர்த்தினாள்.

''நீங்க எப்ப வந்தீங்க அங்கிள்?''

''நேத்து ராத்திரியே டிக்கெட் புக் பண்ணி பிளைட்லே வந்துட்டேன். நடுராத்திரியில் அட்ரஸ் தேடி அலைய முடியாததாலே ஹோட்டல்லே தங்கிட்டு, பொழுது

விடிஞ்சதும் புறப்பட்டு வர்றேன். அங்கே உங்க அப்பாவுக்கு எப்படி சமாதானம் சொல்றதுன்னு தெரியலேம்மா. வண்டி கிளம்பியதும்தான் சீதா சொன்னா... நீ இப்பவே என்னோட புறப்படு.''

''அதுக்கு முன்னாலே கவனிக்க வேண்டிய விஷயம் நிறைய இருக்கு அங்கிள்... முதல்லே போலீசுக்கு போன் பண்ணி, மோசடி குற்றத்துங் கீழே இவங்களை அரெஸ்ட் பண்ணச் சொல்லுங்க. ரெண்டாவது, நாம கொடுத்த வரதட்சணை, வெள்ளிப் பாத்திரம், தங்க நகை இதையெல்லாம் கைப்பற்ற சொல்லுங்க. மூணாவதா, இவங்க பையன், வைத்தியத்தாலே சரி செய்ய முடியாத அளவுக்கு மோசமான மூளைக் கோளாறு உள்ளவன்கறதை கோர்ட்டுக்கு நிருபிக்க, நல்ல ஸைக்யாட்ரிஸ்ட்கிட்ட காமிச்சு, அவர் கைப்பட சர்டிபிகேட் ஒண்ணு வாங்குங்க.''

''....''

''முதல்லே எங்க அப்பாவுக்கு போன் பண்ணி, 'எதுக்கும் கவலைப்பட வேண்டாம்'னு சொல்லுங்க.''

அவள் அந்த வீட்டின் சோபாவில் அமர்ந்து கொண்டு, அமர்த்தலாக போன் செய்யத் தொடங்கினாள்.

''கால் டு மெட்ராஸ்... நம்பர்... டபுள் ஃபோர் டபுள் ஃபைவ் ஜீரோ ஒன்...''

''....''

''அங்கிள், நம்ம வீட்டுக்கு அடுத்த வீட்டுக்கு போன் பண்ணியிருக்கேன். கால் கிடைச்சதும் முதல்லே அப்பாவைக் கூப்பிட்டுப் பேசுங்க.''



இந்த சம்பவங்களுக்குப்பின் கிட்டத்தட்ட ஆறு மாதங்கள் வரையில் இந்த கேஸ், கோர்ட்டுக்கும் வீட்டுக்குமாய் அலைந்து கடைசியில் கல்யாணச் செலவும், வரதட்சணையும், நஷ்டஈடாக மூன்று லட்சமும் வித்யாவுக்குக் கிடைத்தது.

அவள், தன் படிப்பை மேலே தொடர்ந்தாள். ராகவனும், சீதாவும், வித்யாவின் தந்தையும் அவளுக்கு நல்ல இடமாகப் பார்த்து இரண்டாவது முறையாக திருமணம் செய்து வைத்துவிட வேண்டுமென ஒற்றைக் காலில் நின்றனர்.

அவள் நிர்தாட்சண்யமாக மறுத்து விட்டாள்.

''படிப்பை முடிச்சுட்டு வேலைக்குப் போகலாம்னு இருக்கேன்.''

''இப்ப நீ வேலைக்குப்போய் சம்பாதிக்க வேண்டிய அவசியமே இல்லையேம்மா?''

''நல்லாயிருக்கே நீங்க சொல்றது? எனக்கு வயசான - உடம்பு சரியில்லாத அப்பா இருக்கார். ஆபீஸ்லே லஞ்சம் வாங்கக் கூடத் தெரியாத அப்பாவி அங்கிள் இருக்கார். தனக்கோ, தன் குழந்தைகளுக்கோ வேணுமேன்னு சேர்த்து வச்சுக்கத் தெரியாத அம்மா இருக்காங்க. இன்னும் எத்தனையோ படிக்கணும்னு நெஞ்சு நிறைய கனவுகளை சேர்த்து வச்சிட்டிருக்கற தம்பி இருக்கான். இவங்களை எல்லாமாவது விடுங்க. என் தங்கச்சி லல்லு, கல்யாண வயசுல வந்து

நிக்கறப்ப அங்கிள் வேலையில இருந்து ரிடையராயிடுவாரு... ரொம்பவும் வயசாகிக் குழந்தை பெத்துக்கறதோட கஷ்டமே இதுதான். உடம்புல இருக்கிற தெம்பெல்லாம் போய் அம்மாடின்னு உட்கார்ற சமயத்துலதான் ஜாதக கட்டையோ இல்லே காலேஜ் அப்ளிகேஷன் ஃபாரத்தையோ கையில எடுக்க வேண்டியிருக்கும்.''

அவள் ராகவனைப் பார்த்து கண்சிமிட்டி சிரித்தாள்.

''நான், உங்களைக் குத்தம் சொல்லலை அங்கிள். உங்க ஜாதகம் அப்பேர்ப்பட்டது. முப்பத்தஞ்சு வயசுக்கு மேலதான் மன்மதன் உங்க கிரகத்தையே பார்க்கறான்... ஐயய்யோ, அடிக்காதீங்க... அம்மா... பாருங்க... அங்கிள் என்னை அடிக்கிறாரு.''

''இத்தனை பேசறே... என்னை மட்டும் அங்கிள்னு கூப்பிடறே. என் பெண்டாட்டிய மட்டும் அம்மான்னு கூப்பிடறியே? நல்லாயிருக்கா இது?''

ராகவன் கையை ஓங்கியபடி கேட்க - அவள், சீதாவின் பின்னால் நின்றபடி சிரித்தாள்.

''சின்னக் குழந்தை தன் தாயை அம்மாங்குது. பெரியவங்க, நம்மை எல்லாம் காப்பாத்தற அம்பாளை அம்மாங்கறோம். கருணையும், பாசமும், பிரியமும் உள்ள எந்தப் பொண்ணும் அம்மாதான். ஆனா, அப்பா மட்டும் ஒரு குழந்தைக்கு ஒருத்தராத்தான் இருக்கணும். ஒரு அப்பா



இருக்கறப்ப இன்னொருத்தரை அப்பான்னு கூப்பிட்டா அது செத்துப் போன என்னைப் பெத்தவளை நான் அவமானப் படுத்தற மாதிரியாகும்.''

''நீ பேசாம வக்கீலுக்கு படி வித்யா...''

சீதா, அவளது கன்னத்தை வழித்து நெட்டி முறித்தாள்.

''பேசாம வக்கீலுக்கு படிச்சு பிரயோஜனமில்லேம்மா. பேசற வக்கீலுக்குத்தான் கேஸ் நிறைய வரும்.''

இதற்குப் பின் வித்யாவைப் பெற்றவர், அவளைக் கல்யாணம் செய்து கொள்ளச் சொல்லி, வற்புறுத்தவே இல்லை.

வித்யா, பி.ஏ. படித்துக் கொண்டிருந்த போது - அவள் தந்தை காலமானார்.

அவள் அதற்கு மேலும் படித்து, வக்கீல் பட்டம் பெற்ற போது அவளைக் கட்டியணைத்து உச்சி முகர்ந்தது ராகவன் தம்பதியர்தான்.

இன்று இந்த வித்யா - பிரபல வக்கீல் மட்டுமல்ல... இந்த குடும்பத்தை நிர்வகிப்பதே இவள்தான்.

இவள் தன்னிடம் வரும் கேஸ்களை அலசுவதற்காக தனி ஆபீஸ் ரூம் எதுவும் வைத்துக் கொள்வதில்லை.

கல்லூரலில் மாவாட்டியபடியே, கட்சிக்காரருடன் பேச்சுக் கொடுப்பாள். வீட்டைப் பெருக்கியபடியே தனது சந்தேகங்களை கட்சிக்காரரிடம், அலசுவாள்.

துணி துவைத்தபடியே, தனது குமாஸ்தாவிடம் அன்றைய கோர்ட்டில், தான் பேசப் போகும் பாயிண்ட்டுகளைப் பற்றி வெளுத்து வாங்குவாள். லல்லுவுக்கு தலைபின்னியபடியே எதிர்க்கட்சியை எப்படி பின்னி எடுக்கலாம் என்பது பற்றி, தனது ஜூனியர் லாயர் சுமித்ராவிடம் சொல்லுவாள்.

**தா**வணி தலைப்பை விரலில் சுருட்டி பிரித்தபடி லல்லு திறந்த வாய் மூடாமல், அண்ணன் போவதையே பார்த்த படி...

கல்யாணத்துக்கு முன்பெல்லாம் முகுந்தனும், லல்லுவும், வித்யாவும் இரவு பதினோரு மணி வரைக்கும் படுக்கப் போகாமல் சீட்டு விளையாடுவார்கள். டி.வி. பார்ப்பார்கள். சினிமாப் பெயர்களைச் சொல்லி விளையாடுவார்கள். இது எதுவும் அந்த நேரத்துக்குப் பிடிக்காது போனால் ஆளுக்கொரு பக்கமாய் ராகவனையும், சீதாவையும் ஏதாவது கேட்டு சீண்டுவார்கள்.

வித்யா கறுப்புக் கோட்டை மாட்டிக் கொண்டு விட்டால் அடுத்த நிமிஷமே கோர்ட்டுக்குப் பறந்து விடுவாள்.

''அந்த கோட்டை என் கண் முன்னாடிதான் சித்த நேரம் போட்டுட்டு இரேன். கண் குளிர பார்க்கறேன்.''

இப்படி சீதா சொன்னால் மட்டும் மெல்லிய உதட்டை அழுந்த கடித்தபடியே



மறுத்து விடுவாள்.

''ஒரு வக்கீல் கறுப்பு கோட்டை மாட்டிக்கிட்டு தன் வீட்டை கோர்ட்டா மாத்திக்க கூடாதும்மா. இங்கே உங்க கூட இருக்கிற வரைக்கும் நான் ஒண்ணுமே தெரியாத அப்பாவிப் பொண்தான். அதுதான் எனக்கு நிம்மதி. உங்களுக்கும் நிம்மதி... இங்கே நான் பாயிண்ட் பேச ஆரம்பிச்சா வீடு கோர்ட்டாயிடும்.''

இப்பேர்ப்பட்ட வித்யா, ஆசையாய், அருமையாய் பார்த்துப் பார்த்து முகுந்தனுக்கு கல்யாணம் செய்து வைக்க -

இன்று அந்த திருமணமே - அந்த அழகான குடும்பத்தை - வழக்கு மன்றமாகப் போகிறது!

பால் தம்ளரை முகுந்தனின் கையில் கொடுத்து அனுப்பியவள் சட்டெனத் திரும்பிப் பார்க்கிறாள்.

இன்று வித்தியாசமான இரவாக இருப்பதன் அர்த்தம் இரண்டுங்கெட்டான் பருவத்திலுள்ள லல்லுவுக்கு புரிந்தும், புரியாததுமாய்...

''லல்லு!''

வித்யா, அவளது தோளைத் தொட்டு முகவாயை நிமிர்த்துகிறாள்.

''உம்....''

''நாம ரெண்டு பேரும் படுத்துக்கப் போகலாம் வா!''

''எனக்கு தூக்கம் வரல்லையே அக்கா!''

''ஏன்டீ?''

''அண்ணி வந்ததுக்கு அப்புறம் வீடு இன்னமும் சந்தோஷமா இருக்கும்னு நினைச்சேன். நேர்மாறா போயிகிட்டிருக்காப்பல இருக்கே?''

''அசடு, அவளும் புதுசில்லையா? ஆரம்பத்துல அப்படி தான் இருக்கும். போகப்போக சரியாகி விடும்.''

வித்யாவின் வார்த்தைகளைப் பொய்யாக்குவது போல கட்டிலில் குப்புறப்படுத்து விம்மிக் கொண்டிருக்கிறாள் சந்தியா.

---

# 2

---

அந்த வீடும், சூழ்நிலையும் சுத்தமாய் பிடிக்கவில்லை சந்தியாவுக்கு...

அவள் வளர்ந்த விதமே வேறு... ஒரே பெண்ணாய் அமர்க்களமாய் வளர்ந்தவள் அவள்.

முதலாவது, அத்தனை சீக்கிரத்தில் கல்யாணம் செய்து கொள்ளவே பிடிக்கவில்லை.

எத்தனை சுதந்திரமாக இருந்தாள் அவள்...? வேளைக்கொரு அலங்காரமும், பொழுதுக்கொரு உல்லாசப் பயணமுமாய்...

அவள் அப்பா நரசிம்மனுக்கு, இருந்திருந்து இப்படியொரு புத்தி போக வேண்டாமென்றே தோன்றுகிறது அவளுக்கு...



முகுந்தன் குடும்பத்தினர் பெண் பார்க்க வந்த பொழுதே அவள் அம்மாவிடம் முனகினாள்.

''மாப்பிள்ளை பையனோட படிப்பையும், தகுதியையும் மாத்திரம்தான் அப்பா திருப்பி திருப்பிச் சொல்றாரே தவிர - அந்தப் பையனோட குடும்ப அந்தஸ்தைப் பத்தி ஏதாவது சொல்றாரா...?''

''நல்ல குடும்பம் சந்தியா! 'ஓ ஹோ'ன்னு காரும் பங்களாவுமா இல்லைன்னாலும் அடக்கமான அமரிக்கையான குடும்பம்னு கேள்விபட்டேன்...''

''காரும் பங்களாவும் இருக்கற கௌரவமான குடும்பங்களே உன் கண்ணுல படல்லியா? இத்தனாம் பெரிய வீட்டுல காலை வீசி வீசி நடந்துட்டு, நான் எப்படி அந்த வீட்டுல போய் இருப்பேன்...! கார்... அதைச் சொல்லு... என்னால கார் இல்லாம ஒரு நிமிஷம் இருக்க முடியுமா...? அந்த மனுஷன் ஒரு டப்பா ஸ்கூட்டர் வச்சிருக்கான் போல இருக்கு. அதுல எப்படி என்னால... உட்கார முடியும்? குறைஞ்சபட்சம் ஒரு டெலிபோன்? அது கூட இல்லையின்னு அப்பா சொல்றார்... டெல் மீ... ஹவ் கேன் ஐ மானேஜ்...?''

நரசிம்மன் மகளின் தோளைத் தட்டியபடி புன்னகைத்தார்.

''பேபி... நீ சொல்றதெல்லாம் நியாயம் தான். இல்லைன்னு சொல்லலே... பட் ஒன் திங்... உங்க அப்பா எந்த ஒரு காரியத்தையும்

யோசிக்காம செய்ய மாட்டார். அதுல உனக்கு நம்பிக்கை இருக்கு இல்லே?''

அவள் மௌனமானாள்.

அவர் நீளமாய் ஒரு பிரசங்கம் செய்தார்.

''அம்மா சந்தியா... இந்தப் பையன் முகுந்தன் இருக்கானே... ஃபர்ஸ்ட் கிளாஸ்லே பாஸ் பண்ணிட்டு இன்னிக்கு மெட்ராஸ்லேயே நம்பர் ஒன் இன்கம் டாக்ஸ் ஆபீஸரா இருக்கான்... பையன் இந்த வயசுலேயே அசகாய சூரனா இருக்கான்... மெட்ராஸ்லே இருக்கிற சினிமாக்காரங்க, கோடீஸ்வரங்க எல்லாருமே அவன் பேரைக் கேட்டாலே நடுங்கறாங்க... பையன் ஒரு பைசா கையில வாங்கறதில்லையாம். அத்தனை ஸ்டிரிக்ட்டாம். கவர்ன்மெண்ட் ஜாப்... நாம ஒவ்வொரு வருஷமும் இந்த '....ப்பசங்க' ரெய்டுக்கு வர்றப்ப, வயித்துல நெருப்பைக் கட்டிட்டு இருக்கறதுக்கு... இந்த முகுந்தனை வளைச்சுப் போட்டுக்கறது எல்லாத்துக்கும் சௌகரியம்...''

''உங்க சௌகர்யத்துக்காக என்னோட வாழ்க்கையை நான் விலையா கொடுக்கணுமா?''

''மைடியர் கேர்ள்.! உன்னோட வாழ்க்கையை ஒளி மயமா ஆக்கறதுக்காகத்தான் நான் இத்தனை பாடுபடறேன்... கல்யாணமாகி ஒரு மாசம்... தப்பினா ரெண்டு மாசம்...: நீ அந்த வீட்டோட இரு... அந்த ரெண்டு மாசத்துக்குள் காரும் மத்த வசதிங்களையும் நான் ஏற்பாடு



பண்றேன். அதுக்கப்புறம் மாப்பிள்ளையை நம்ம வீட்டோட வரவழைச்சுக்க நானாச்சு...''

''ஆமா. அவ இன்னும் புகுந்த வீட்டுக்கே போகலை. அதுக்குள்ளே பொறந்த வீட்டுக்கு திரும்பி வர்றதுக்கு வழி சொல்லித் தர்றீங்களே... இது நல்லாவா இருக்கு? ஒரு பொண்ணுக்கு கல்யாணம்னா - அவளைப் புகுந்த வீட்டுக்கு அனுப்பறப்ப பெத்தவரா... லட்சணமா, நாலு புத்திமதியை சொல்லணும்... அதை விட்டுட்டு... இதுக்குப் பேரு பாசம் இல்லீங்க... உங்களுக்கு நீங்களே தேடிக்கற நாசம்.''

தாயார்காரி, எரிச்சல் மேலிடக் கத்தினாள்.

அவளுக்கு ஆரம்பத்திலிருந்தே சந்தியாவின் நடவடிக்கையும் போக்கும் பிடிக்கவேயில்லை. அவளது சிநேகிதர்கள் என்று சொல்லிக் கொண்டு, வீட்டிலும் வெளியிலும் கும்மாளம் அடிக்கும் இளைஞர்களைக் கண்டாலே, எரிச்சல் பற்றிக் கொண்டு வரும் அவளுக்கு.

''சனியன் பிடிச்சவளுக்கு, அவ அப்பாவோட செல்லம் வேற... ஒரு கல்யாணத்தைப் பண்ணி வச்சாத்தான் இது உருப்படும். இல்லே... குடும்பப் பேரையே நாறடிச்சுடும்.''

அவள் பயந்தபடி எதுவும் நேராமல் - இந்த மட்டுக்கும் நல்ல வரனாகக் கிடைத் திருப்பதில் அவளுக்குப் பரம திருப்தி...

நரசிம்மனோ - முகுந்தனை தன் மாப்பிள்ளையாக்கிக் கொள்ள

வேண்டுமென்கிற ஒரே லட்சியத்துக்காக, என்ன வேண்டுமானாலும் செய்யத் தயாராக இருந்தார்.

கல்யாணத்துக்குப் பின், மருமகனை தன் உபசாரத்தினாலும், மற்ற விஷயங்களினாலும் அப்படியே காந்தம் போல, தன் பக்கம் இழுத்து விடலாம் என்பது அவருடைய அசைக்க முடியாத நம்பிக்கை!

அதன் முதல் அஸ்திரம்தான் - அன்று காலையில் முகுந்தனுக்கு அவரிடமிருந்து வந்த போன்...

முகுந்தனுக்கு - சந்தியாவைப் பிடித்த அளவுக்கு மாமனாரைப் பிடிக்கவில்லை...

சந்தியாவின் கழுத்தில் தாலியேறுவதற்குமுன் - அடிக்கடி வித்யாவிடம் சொல்லிச் சொல்லி மாய்ந்து போனான்.

''வித்யா... அது என்ன, அவர், இத்தனை அலட்டல் அலட்றாரு?''

''உஷ். சும்மாயிருடா! மாமனாராகப் போறவரைப் பத்தி ஆரம்பத்திலேயே தப்பெண்ணத்தை வளர்த்துக்கக் கூடாது... பின்னாடி பிடிக்காமலேயே போயிடும்...''

முகுந்தன் அந்த நேரத்தில் பேசாமல் இருந்தாலும் நிச்சயதார்த்தத்துக்குப் பிறகு, வீடு நிறைய வந்திறங்கிய சாமான்களைப் பார்த்துக் கொண்டு சும்மாயிருக்க முடியவில்லை.

'' இதெல்லாத்தையும் இவங்ககிட்ட யார்



கேட்டாங்க?... என் கல்யாணம் அமர்க்களம் இல்லாம எவ்வளவுக்கெவ்வளவு ஸிம்பிளா நடக்கணும்னு ஆசைப்பட்டேனோ - எல்லாம் அதுக்கு நேர்மாறா இல்லே நடக்குது...?''

''ஏண்டா, அவர் பொண்ணுக்கு ஃபிரிஜ்ஜும், கலர் டி.வி.யும் கொடுக்கறது அவரோட விருப்பத்தும் பேருல தானே தவிர நாமா கேட்டோமா...? வரதட்சணையா ஒரு பைசா வாங்க மாட்டோம்னு கூட சொல்லியாச்சு இல்லே... இதெல்லாம் அவங்க ஆசை... நாம தடுக்க முடியாது...''

சீதா, எவ்வளவோ சொல்லியும் கேட்காமல், முகுந்தன், நரசிம்மனை அழைத்துச் சொல்லி விட்டான்.

''இதப் பாருங்க... எனக்கு வேண்டியது பெண்டாட்டிதானே தவிர, இதெல்லாம் இல்லே...''

நரசிம்மன், நரைத்த மீசையை ஒதுக்கி விட்டுக் கொண்டு, மெத்தனமாகச் சிரித்தார்.

''இதெல்லாம் என் பொண்ணோட - நான் கொடுக்கற சீதனம் - நீங்க தப்பா நினைக்கக்கூடாது...''

''நோ, நோ... இந்த சாமானெல்லாம் என்னாலேயே ரெண்டு வருஷத்திலே வாங்கிக்க முடியும்.''

''இன்னும் ரெண்டு வருஷம் எதுக்காக காத்திருக்கணும் மாப்பிள்ளே... அதுவும் என்னோட மாப்பிள்ளையா இருந்துட்டு...''

''எனக்கு அதெல்லாம் பிடிக்காது சார். டேக் இட் பேக்...''

செய்தி கேட்டதுமே - சந்தியா, வானத்துக்கும் பூமிக்குமாய் குதித்தாள்.

''இவரு ரோஷத்தாலே இவரு வீட்டுல எந்த வித வசதியுமில்லாம நான் இருக்கணுமா...? காட்டுமிராண்டி... சரியான காட்டு மிராண்டி...''

''இந்தாடி... தன் புருஷனோட, காட்டுலே கல்லுலேயும், முள்ளுலேயும் நடந்த சீதை பொறந்த தேசம்டி இது...''

''இன்னமும் அதே பழைய சீதை - கண்ணகி கதையெல்லாம் சொல்லாதேம்மா... போரடிக்குது...''

இப்பேர்ப்பட்ட சந்தியாவுக்கு, அன்று காலையில் தன் தந்தை போன் செய்ததே தெரியாது.

தேனிலவுக்கு காஷ்மீர் போக பிளேன் டிக்கெட் வாங்கி, மற்ற எல்லா வசதிகளையும் செய்ய மாமனார்காரர் காத்திருக்கையில் - புருஷன், தன் புதுப்பெண்டாட்டியைக் கலந்து யோசிக்காமல், 'பட்'டென 'வேண்டாம்' என்று சொல்லி விடுவதாவது...

'ஒரு வார்த்தை... ஒரேயொரு வார்த்தை... 'உன் அப்பாவிடமிருந்துபோன் வந்தது' - என்று சொல்லிவிட்டுப் போனால் என்ன... குறைந்தா போய்விடும்?

'ஒரு நயா பைசாவுக்கு வக்கில்லாதவங்களுக்கு இந்த அளவுக்கு மண்டைக்கனம் இருந்தா - பல லட்சங்களுக்கு ஒரே வாரிசான எனக்கு எத்தனை திமிர் இருக்கும்...?'



அவள் அன்று முழுக்க ஒரு பருக்கை சாப்பிடவில்லை. என்னதான் டைனிங் டேபிளும், ஓரளவுக்கு மற்ற வசதிகளும் இருந்தாலும், அவள் வீட்டைப்போலாகுமா?

வந்த அன்றே முகுந்தன் சொல்லி விட்டான்.

''சந்தியா... மாடி ரூம்தான் நமக்கு பெட்ரும். பட் ஒன் திங்... காலை நேரத்துல வித்யா குளிச்சுட்டு கோர்ட்டுக்கு கிளம்பணும், லல்லு ஸ்கூலுக்கு கிளம்பணும்... நான் வேற எல்லாரையும் பறக்கடிப்பேன். அந்த நேரத்துல யார் வேணுமானாலும் மாடி பாத்ருமையும் பெட்ருமையும் யூஸ் பண்ணிப்போம். ராத்திரிக்கு மட்டும்தான் இது நமக்கு ஏக போக உரிமை...''

சந்தியா இதற்கு பதிலளிக்காமல் மௌனமாய் உட்கார்ந்திருந்தாள்:

மனசுக்குள் அப்பா சொன்ன வார்த்தைகள்...

'கொஞ்ச நாள் அட்ஜஸ்ட் பண்ணிக்கோ சந்தியா, அடையார்லே நாலுகிரவுண்ட் வாங்கியிருக்கேன். ஃபர்ஸ்ட் கிளாஸ் பங்களா கட்டிடலாம்... மேலும் மாப்பிள்ளை, நமக்கேத்த மாதிரி வளையற டைப் இல்லை - கொஞ்சம் விறைப்பு அதிகம்... ஸோ வாட்? வளைக்கவே முடியாத இரும்பைக் கூட, நெருப்புலே பழுக்கக் காய்ச்சி அடிக்கறபடி அடிச்சா வளைஞ்சுடறதில்லையா...?'

அன்று காலையில் இவள் தூங்கியெழுந்த போது பெட்காபி வரவில்லை. கீழ் ஹாலில் ரேடியோவில், இரைச்சலாய் செய்தி வாசிப்பு...

அதையும் மீறிக் கொண்டு ராகவனின் குரல்... பொழுது ஒரு பக்கம் விடியும் முன்பே தேவாரமும், திருவாசகமும் அமர்க்களப்படுத்திடுவார் அவா...

அவரது குரலையும் மீறி, வாசலில் வித்யா காய்கறிக்காரியிடம் கறிவேப்பிலை கொத்துமல்லிக்கு மல்லுக்கு நிற்கும் குரல்...

எல்லாவற்றையும் தூக்கி சாப்பிடுவது போல அவர்களது படுக்கையை ஒட்டிய குளியலறையிலிருந்து லல்லுவின் நாராசமான அலறல்.

''வித்யாக்கா... எங்கே இருக்கே...? தலையில எண்ணெய் வச்சிட்டிருக்கேன்... பாத்ரூம் பைப்லே தண்ணி வரல்லே... அவசரமா தண்ணி வேணும். சீக்கிரமா வா...''

இத்தனை கோலாகலங்களுடன் திருப்பள்ளி எழுச்சி நடக்க - எரிச்சலுடன் கண்திறந்து எழுந்து உட்கார்ந்தவளின் எரிச்சலை மேலும் கிளப்புவது போல இடுப்பில் ஒரு குடமும் கையில் ஒரு பெரிய பிளாஸ்டிக் பக்கெட்டுமாய் வித்யாவின் பிரவேசம்...

''குட் மார்னிங்...''

''......''

''ஐ ஸெட் குட்மார்னிங்...''

''உம்... உம்... குட் மார்னிங்...''

சந்தியா, அவளை நிமிர்ந்து பார்க்காமல் சொல்ல, வித்யா, அதை லட்சியம் செய்யாதவள் போல மேலே சொல்லிக்



கொண்டே போகிறாள்.

''தினமும் பல்லைத் தேய்ச்சிட்டு, ரூமை விட்டு வெளியே வர்றதுக்கு முன்னாடி, ஃபேனை ஆஃப் பண்ணிட்டு, படுக்கைய சுத்தி வச்சுட்டு வந்துடும்மா...''

''வாட்... மெத்தை... அதுவும் ஃபோம் மெத்தை... அதை எப்படி சுருட்டி வைக்கமுடியும்...? மேலும், கட்டில் எதுக்காக இருக்கு? மெத்தைய விரிச்சு வைக்கத்தானே...''

வித்யா புன்னகைத்தாள்.

''நீ சொல்றது சரிதான்... ஆனா, இந்த வீட்டுல, காலையில எழுந்ததும் படுக்கைய சுத்திவச்சிடறது வழக்கம்... படுக்கை விரிச்சே கிடந்தா - மூதேவிதான் வாசம் பண்ணுவா அந்த வீட்டுலேங்கறது எங்க அம்மா, அதான்... உங்க மாமியாரோட வாதம்... கொஞ்ச நாளைக்கு இதையெல்லாம் அட்ஜஸ்ட் பண்ணிக்கோ சந்தியா... நானும், முகுந்தனுமா பல்லாவரத்துல ஒன்றரை கிரவுண்ட் நிலம் வாங்கிப் போட்டிருக்கோம். அப்பா ரிடையரானதும் வீட்டைக் கட்டலாம்னு இருக்கோம். அப்ப அந்த பங்களாவுல உனக்கும் முகுந்தனுக்கும் ஒரு பெட்ரூம்... நம்ம லல்லுவுக்கு ஒரு பெட்ரூம் கம் ஸ்டடி ரூம், அப்பா அம்மாவுக்கு ஒரு பெட்ரூம் கட்டலாம்னு பிரமாதமா பிளான் எல்லாம் போட்டு வச்சிருக்கேன்.''

''.....''

''அந்த பெட்ரூம்லே - படுக்கை, கட்டில்லேயே விரிச்சிருக்கட்டும். நோ

அப்ஜெக்ஷன்..."

சந்தியா, அவளை உறுத்துப் பார்த்தாள்...

"ஒன்றரை கிரவுண்டு...? அதுவும் பல்லாவரத்துல? யார் அங்கே போய் குடியிருப்பாங்க...?"

"என்ன நீ இப்படி சொல்றே...? நம்ம நாட்டுல வஞ்சனையில்லாமப் பெருகிட்டே வார ஒரேயொரு விஷயம் இந்த ஜனத்தொகைதாம்மா... பல்லாவரம், பரங்கிமலை, ஏன்... தாம்பரம் வரைக்கும் கிடைக்கிற இடத்துல எல்லாம் சின்னதும் பெரிசுமா வீடு கட்டிட்டே போறாங்க... இன்னும் கொஞ்ச நாள்லே பாரு... அந்தப் பகுதியில எல்லாம் ஒரு குண்டூசிகுத்தற அளவுக்குகூட இடம் கிடைக்காம ஜனங்க திண்டாடற காலம் வரும்..."

"எனக்கு அதைப் பத்தி கவலையில்லே. எங்க அப்பா அடையார்லே நாலு கிரவுண்ட் வாங்கிப் போட்டிருக்காரு... இன்னும் ஆறுமாசத்துல பங்களா ரெடியாயிடும்..."

வித்யா அவளது முகத்தையே புன்னகையுடன் பார்த்தாள். கையிலிருந்த பக்கெட்டையும், குடத்தையும் குளியலறைக்குள் கொண்டு வைத்து விட்டு, சந்தியாவின் அருகில் வந்தாள்.

"பெத்தவங்க பெரிய பாலஸ் கட்டிக் கொடுக்கலாம் சந்தியா... ஆனா, ஒரு பொண்ணுக்கு தன் புருஷன் தனக்காகக் கட்டற குடிசையில கிடைக்கற சந்தோஷம், அந்த பாலஸ்லே வர்றதில்லே. நீ சின்னவ...

அதனால உனக்கு இப்ப எது சொன்னாலும் புரியாது. போகப்போக புரிஞ்சுப்பே..."

காலையில் இந்த சம்பவத்துக்குப் பிறகுதான் முகுந்தன், தன் மாமனாரிடம் காஷ்மீர் பயணம் வேண்டாம் என்று சொன்னது...

எல்லாமாகச் சேர்ந்து அவளது பிடிவாத குணத்தை வந்த அன்றைக்கே வெளிச்சம் போட்டுக் காட்டிவிட்டது.

காலையில் வித்யா, தான் சாப்பிடுவதற்கு முன் மாடியேறி வந்து அவளைக் கூப்பிட்டாள்...

"காபி குடிக்க கூட கீழே வரல்லையே... பசிக்கலையாம்மா...? இப்ப என்னோட சாப்பிட வர்றியா?"

"இத்தனை சீக்கிரம் சாப்பிட்டு எனக்குப் பழக்க மில்லே... காலையில ஒம்பது மணிக்கு பிரேக் ஃபாஸ்ட்..."

"பிரேக் ஃபாஸ்ட்?"

வித்யா கண்களை அகல விரித்தாள்.

"அப்ப சாப்பாடு...?"

"பகல் ரெண்டு மணிக்கு..."

"அப்புறம்?"

"ஈவ்னிங் ஸ்நாக்ஸ் வித் டீ... நைட் 'டென் ஓ' கிளாக்குக்கு டின்னர். தட்ஸ் ஆல்"

"வாவ்! இதை இங்கே ஃபாலோ பண்றது சாத்தியமே இல்லே... இங்கே காலையில ஆறுமணிக்குள்ள காபி... பத்து மணிக்கு சுடச்சுட சாப்பாடு... ஆபீசுக்குப் போறப்ப

கையில ஜில்லுனு தயிர் சாதம்... சாயந்திரம் அஞ்சு மணிக்கு ஆபீஸ் முடிஞ்சு வர்றப்ப பஜ்ஜியோ.. பகோடாவோ அம்மா அருமையா போட்டு வச்சிருப்பார். ராத்திரி எல்லாருக்கும் - இன்க்ளூடிங் அங்கிள் - தயிர் சாதமும் மாவடுவும் தான்...''

சந்தியா, அவளைப் பார்வையால் ஒரு வெட்டு வெட்டி விட்டு திரும்பிப் படுத்தவள்தான்.

நடுவில் லல்லுவோ சீதாவோ - யார் வந்த போதும் எழுந்திருக்கவே இல்லை.

இப்பொழுது...

முகுந்தன் வீடு திரும்பி இரவு சாப்பாட்டுக்கு அழைத்த போது தூங்குவது போல பாவனை செய்தாள்.

அவன் தொட்ட போது ''த்சு'' என கொசு விரட்டுவது போல அவனது கையைத் தட்டிவிட்டாள்...

**பா**ல் தம்ளரை மேஜை மீது வைத்த முகுந்தன் - குப்புறக்கிடக்கும் மனைவியையே ஒரு தீர்க்கமாய் பார்க்கிறான்.

மாமனாரும், மற்றவர்களும் எப்படியோ... இவளை அவனுக்கு மிகவும் பிடித்திருக்கிறது...

அழகான - எலுமிச்சை நிறமும்... வண்டு கண்களும்... வாளிப்பான தேகமும்... எப்பேர்பட்ட ஆணுக்கும் போதை யூட்டும்.

எல்லாம் சரிதான்... இத்தனையையும்



கொடுத்த இறைவன் இவள் முகத்தில் ஒரு இளம் புன்னகையை எழுத மட்டும் ஏன் மறந்தான்?

எப்பொழுதுமே இந்த முகம் இப்படித்தானா? இல்லை, தன்னிடத்தில் மட்டும்தான் இப்படி இறுகிப்போகிறதா...?

தன்னிடம் மட்டும்தானென்றால்...?

அவளுக்கு இந்த கல்யாணத்தில் விருப்பமே இல்லையா...?

'சட்'டென நெஞ்சில் கல்லைத் தூக்கிப் போட்டாற் போல இருக்கிறது அவனுக்கு...

மெள்ள அவளைப் புரட்டி, தன் மடிமீது போட்டுக் கொள்கிறான். அதற்கிடையில் அறைக்கதவைத் தாழிட்டோமா என்று ஒரு முறை பார்த்துக்கொள்கிறான்...

''சந்தியா...''

''......''

''டேய்... சந்தியா... என்னடா... உடம்பு சரியில்லையா...?''

''......''

''என் மேல கோபமா...?''

அவள், 'வெடுக்'கென அவனிடமிருந்து தன்னைப் பிடுங்கிக் கொண்டு தள்ளிப் போய் படுக்கிறாள்.

''ஏய்... என்ன இது...? என்ன ஆச்சு...? இங்கே பாரு... இங்கே பாரேன்... என் மேல கோபமா...? என்ன கோபம்...? இல்லே, என்னைப் பிடிக்கலையா.?''

அவள், கண்களை சுருக்கியபடி அவனைப்

பார்க்கிறாள்.

''உங்களைப் பிடிக்கலையின்னு நான் சொன்னேனா...?''

அவளது பதில் அவன் இதழில் குறும்புப் புன்னகையைத் தோற்றுவிக்கிறது.

''தாங்க்ஸ் - என்னைப் பிடிச்சிருக்குன்னதுக்கு... வேற எது உனக்குப் பிடிக்கலே?''

அவள், விருட்டென எழுந்து உட்கார்ந்து, தன் மீது தலையணை ஒன்றைப் போட்டுக் கொள்கிறாள்.

''இந்த வீட்டுலே எனக்கு பிடிச்சது உங்க ஒருத்தரைத்தான்...''

அவன், புருவத்தைச் சுருக்குகிறான்.

''என்ன சொல்றே?''

''சில விஷயங்களை விரிவா சொல்றது நல்லதில்லே. கேட்க ஒரு மாதிரியா இருக்கும்...''

''எனக்கு மூடி மறைச்சுப் பேசறது பிடிக்காது...''

அவன் பேச்சில் மெல்லிய கடுப்பு ஏறுகிறது...

''ஓ.கே... ஓ.கே... நேரே சொல்றேன். எனக்கு இந்த வீட்டுல நெருங்கப் பிடிக்கலே. இந்த மனுஷங்களோட சேர்ந்து வாழ என்னால முடியாது...''

''ஏய்...''

''இதப் பாருங்க... என் பேரு சந்தியா... 'ஏய் கீய்'னு மிரட்டாதிங்க... உங்களுக்கு



என்னோட வாழறதுல ஆசை என்றால் எங்க வீட்டுக்கு வந்துடுங்க... எங்க வீட்டுல, என் பேரண்ட்ஸோட சேர்ந்து இருக்கப் பிடிக்கலைன்னா, நான் வற்புறுத்தலை... எங்க அப்பா, நமக்காக ஃபர்ஸ்ட் கிளாஸ் பங்களா ஒண்ணு கட்டப் போறார். அதுக்குப் போயிடலாம்... ப்ளீஸ்...''

அவன் அவளை விட்டு விலகி உட்காருகிறான்.

''நீ நினைக்கற மாதிரி அத்தனை சுலபமா என்னாலே பெத்தவங்களையும், அக்கா தங்கையையும் விட்டுட்டு வர முடியாது சந்தியா... உங்க அம்மா எப்படி பத்து மாசம் சுமந்து பெத்திருக்காங்களோ அதே மாதிரிதான் என்னையும் எங்க அம்மா பெத்திருக்காங்க. அதையும்விட ரொம்பவும் முக்கியமானது... நாளைக்கு இந்த குடும்பத்தை என் தோள்லே சுமக்க வேண்டியவன் நான். அதை விட்டுட்டு பொறுப்பில்லாம பெண்டாட்டியோட மாமியார் வீட்டுல போய் உட்கார்ற முட்டாள் நானில்லே...

''அப்ப... நாம சேர்ந்து, தனியா வாழ முடியாதுங்கறீங்க...?''

அவன், அத்தனை இக்கட்டிலும், வாய் விட்டுச் சிரிக்கிறான்.

''புருஷனும், பெண்டாட்டியும் தனியா இருக்கறதுல எந்த வித என்ஜாய்மெண்ட்டும் இல்லே சந்தியா...! இருபத்தி நாலு மணி நேரமும் 'கண்ணே மூக்கே'ன்னு

கொஞ்சிகிட்டேயிருந்தா சீக்கிரத்தில் அலுத்துடும். இப்ப நான் உன்னைக் கொஞ்ச வர்றேன்னு வச்சுக்க... நினைச்ச நினைப்பை உடனே செயல்படுத்த முடியாம, ஆபீஸ் வேலை... வீட்டுக்கு வந்தா சின்னச் சின்ன வேலை... அம்மாவோட கோயிலுக்குப் போறது... வித்யா அக்காவோட லைப்ரரிக்குப் போறது... லல்லுவுக்கு பாடத்துல ஏற்படற சந்தேகத்தை தீர்க்கறது... இப்படி... இத்தனையையும் கடந்துட்டு உன்கிட்ட வர்றப்ப எனக்கு ஏற்படற குஷியே தனிதான் சந்தியா...''

''அப்ப கடைசியாத்தான் நானா?''

''நோ... நீ சரியாப் புரிஞ்சுக்கலே. ஒரு மனுஷன் தன் கடமைகளை எல்லாம் ஒழுங்காக முடிச்சுட்டு, காதல்லே இறங்கினா, அந்தக் காதலை அவனால முழுசா அனுபவிக்க முடியும். அதைவிட்டுட்டு... காதலிக்கறதும, பெண்டாட்டியை திருப்தி பண்றதும்தான் முக்கியம்னு நினைச்சா... சீக்கிரத்துல அவன் சோர்ந்து போயிடுவான். அலுத்துப் போயிடுவான்...''

''எனக்கு இப்பவே அலுத்துப்போச்சு. நாளைக்கு நான் எங்க வீட்டுக்குப் போகப் போறேன்.''

''நாளைக்கு எனக்கு லீவு கிடையாது சந்தியா... வரப்போற ஞாயித்துக் கிழமை போவோம்...''

சந்தியா தோள்பட்டையைக் குலுக்கிக் கொள்கிறாள்.



''எனக்கு துணை அவசியமில்லே... நான் தனியா அமெரிக்கா, ஜப்பான் எல்லாம் போயிட்டு வந்தவ. ஸோ, நாளைக்கு காலைல நான் கிளம்பறேன்...''

அவள், கட்டிலில் கையையும் காலையும் விசிறிப் போட்டபடிப் படுக்க, முகுந்தன் ஒரு தலையணை, ஜமக்காளத்துடன் மொட்டை மாடிக்குப் போகிறான்.

எதிர் பாராமல் வந்து நின்ற மகளைப் பார்த்து திகைத்துப் போகிறாள் அந்தத்தாய்.

''தனியாவா வந்தே?''

''பின்னே? உன் அழகான மாப்பிள்ளை காருல கொண்டு வந்து விட்டுட்டுப் போறாருன்னா நினைச்சே?''

''முந்தாநாள் புருஷன் வீட்டுக்குப் போனவ இன்னிக்கு வந்து நிக்கறியேடி... நாலுபேர் கேட்டா, நான் என்ன பதிலைச் சொல்லுவேன்...?''

''அந்த நாலு பேரை என்கிட்டே அனுப்பு. நான் கவனிச்சுக்கறேன்...''

சந்தியா, தனது அறைக்குள் போய், தனது பிரும்மாண்டமான கட்டிலில் 'தொப்'பென விழுகிறாள். ஏர்கண்டிஷனின் இதமான குளுகுளுப்பு, கொதித்துப் போன நெஞ்சுக்கு ஆறுதலாய்...

இன்று வரையில், இவளது வார்த்தையை மீறி யாரும் எதுவும் செய்ததில்லை...

அவ்வளவு ஏன்...? அவள்

கண்ணசைத்தால் காலடியில் விழ, எத்தனையோ பணக்கார இடத்து இளைஞர்கள் காத்திருந்தார்கள்.

அப்படியிருக்கையில் - போயும் போயும் இந்த முகுந்தனிடத்தில் என்ன அந்தஸ்தை கண்டார் தன் தந்தை என்பது இன்னமும் அவளுக்குப் புரியாத புதிராகத்தான் இருக்கிறது.

'அல்பமான இன்கம்டாக்ஸ் ஆபீஸ் வேலை... வெறி நாய் பாயறமாதிரி... வேட்டை நாய் துப்பு துலக்கற மாதிரி அலையற வேலை...

ஊருல இருக்கறவங்க சாபத்தையெல்லாம் தலையில சுமக்கற வேலை...

சனியன்! இதுக்குப் போய் யாராவது பயப்படுவாங்களோ?'

அப்பா வந்து கேட்டால், என்ன பதிலைச் சொல்வது என ஒரு கணம் யோசிக்கிறாள்...

திட்டுவார், நிச்சயம் திட்டுவார்...

அவள் தீவிரமாய் காரணத்தைத் தேடுகிறாள் -

மாமனார், மாமியார் மீது குறை சொல்ல முடியாது... புருஷன்காரனுக்கு தன் மீது அன்பில்லை என்று சொல்ல முடியாது... சின்ன நாத்திக்கு தன்மேல் பொறாமை என்றும் சொல்ல முடியாது...

அந்தக் குருவிக் கூட்டில் தான் போய் வாழ முடியாது என்று சொல்லலாம்...

அப்புறம்...? அவள் யார்...? வித்யா...?



அவளுக்கும் அந்தக் குடும்பத்துக்கும் என்ன சம்பந்தம்?

யோசித்துப் பார்க்கையில் முதல் நாள் காலையில் படுக்கையைச் சுற்றி வைப்பதற்காக, அவள் பேசிய பேச்செல்லாம் ஞாபகத்துக்கு வருகிறது...

முகுந்தன் தனது கடமைகளை வரிசைப் படுத்தி சொன்ன போதுகூட, வித்யாவை லைப்ரரிக்கு அழைத்துப் போய் விட்டு வருவதையும் தனது கன முதல் கடமைகளில் ஒன்றாகக் குறிப்பிட்டதையும் - இது எல்லாவற்றுக்கும் கடைசியாகத்தான் பெண்டாட்டியைக் கொஞ்சுவது என்பது போலப் பேசியதையும் நினைத்துப் பார்த்தபோது ஆத்திரம் பொங்குகிறது.

'இவளைவிட நான் எந்த விதத்துல மட்டமாப் போயிட்டேன்?'

'இத்தனைக்கும் புருஷனோட சொந்த அக்கா கூட இல்லே... இவ என்ன, என்னை படுக்கைய சுருட்டி வைக்கச் சொல்லி ஆர்டர் பண்றது...?'

அன்று மாலை, நரசிம்மன் வீடு வந்து சேர்ந்ததும், மகளைப் பார்த்து பதைத்தபடி கேட்ட கேள்விக்கு, அவள் இந்தக் காரணத்தைத்தான் சொல்கிறாள்.

''என்னை அதட்ட ஹூ இஸ் ஷீ? என்னமோ அநாதை இல்லத்துல சேர்ந்திருக்கற புதுப் பொண்ணை அதட்டற மாதிரி அதட்டறா... காலையில எழுந்தவுடனே படுக்கைய சுத்திடணுமாம்... ஃபோம் மெத்தைய சுருட்ட

முடியாதுங்கற சின்ன விஷயம் கூடத் தெரியாத மடச்சி... அதை விடுங்க... காலையில பெட் காபி கிடையாதாம், ஆறுமணிக்குள்ள எழுந்தாத் தான் காபியாம்... பிரேக் ஃபாஸ்ட்னா என்னன்னு கேட்கறா அந்த லாயர்! ராத்திரி வெறும் தயிர் சோறும் மாவடுவும்தான் டின்னராம்...''

''.....''

''உங்க சௌகரியத்துக்காக, ஒரு இன்கம்டாக்ஸ் ஆபீஸருக்கு என்னைக் கல்யாணம் பண்ணி வச்சதை விட, ஒரு அரசியல்வாதிக்கு என்னைக் கட்டி வச்சிருக்கலாம்... ஏன்னா... இந்தக் காலத்து அரசியல்வாதியோட சொல்லுக்கு இன்கம்டாக்ஸ் ஆபீஸ் மட்டுமில்லே - போலீஸ் டிபார்ட்மெண்ட்டே கையக் கட்டிக் கொண்டு நிக்க வேண்டிய நிலைமை...''

''நீ சொல்றது எல்லாம் சரிதாம்மா. ஆனா இப்ப இந்த சந்தர்ப்பத்துல போய் வந்திருக்கியே...?''

சந்தியா, புரியாமல் புருவத்தை உயர்த்துகிறாள்.

நரசிம்மன் அதற்கு மேலும் அங்கு நின்று பேசப் பிடிக்காதவராய் மகளை அழைத்துக் கொண்டு தன் அறைக்குப் போய் கதவைத் தாழிட்டுக் கொள்கிறார்.

''உன்னை இத்தனை படிக்க வச்சும் - ஆம்பிளை மாதிரி வளர்த்தும்... 'நானும் முட்டாள் பெண் குலத்தைக் சேர்ந்தவ தா'ங்கறதை நிரூபிச்சுட்டியே...? உங்க அம்மா



படிக்காத முட்டாள். நீ படிச்ச முட்டாள்.''

''.....''

''அடுத்த மாசம் இருபதாம் தேதி வாக்கில் ஒரு சில புள்ளிங்க வீட்டுல எல்லாம் ரெய்டுக்கு வரப்போறாங்களாம். நாலஞ்சு தடவை சோதனை போட்டும் கறுப்பு பணம்னு ஒத்தை ரூபா கூட பெயராததாலே - சீஃப் ஆபீசரும் - இது வரைக்கும் சோதனைக்குப் போய் வெறுங்கையோட திரும்பாதவரும் - இந்த வேலையிலே புலியின்னு பேர் வாங்கினவருமான நம்ம மாப்பிள்ளை முகுந்தன்தான் இந்த தடவை கிளம்பறாரு...''

''கிளம்பட்டும். எனக்கென்ன...?''

''எனக்கென்னவா...? சோதனைன்னு வந்தா, அவன் சும்மா விடமாட்டானாம்... தரையைப் பெயர்ப்பான்; சுவத்தை இடிப்பான்... வீட்டுல ஒரு இஞ்ச் இடைவெளி விடாம, அத்தனை பாகத்தையும் குடைஞ்சு தலை கீழா மாத்திப் போடுவான். கொஞ்சம் விட்டா, நம்ம குடலை உருவித்தேடுவான்... இப்ப போய் நீ இங்க வந்துட்டா எப்படி... என்னயிருந்தாலும் புதுசாக் கல்யாண மானவன். பெண்டாட்டிகிட்ட மயங்காம இருக்க மாட்டான்... அவன், உன்னை சுத்திவந்தா, ரெய்டுன்னு கண்ட கண்ட ஆபீஸர்ஸ் என்னை சுத்திவர மாட்டான்...''

''.....''

''பேசாம இருந்தா எப்படிம்மா? ஒரு காசு ரெண்டு காசு இல்லே... பல லட்சங்கள்... நான் உசிரைக் கொடுத்து சம்பாதிச்சது. எல்லாம்

போயிடும். இத்தனையும் எதுக்காக... யாருக்காக சம்பாதிக்கறேன்...? உனக்காகத் தானே - கிளம்பு... குடும்பம்னு இருந்தா, ஒவ்வொண்ணும், ஒவ்வொரு விதமாத்தான் இருக்கும்...''

''இருந்தாலும் - அங்கே என்னால நிரந்தரமா இருக்க முடியாது... யூஸீ... நான் நைட்டி போட்டு மூணு நாளாச்சு... லிப்ஸ்டிக் கையும், ஃபவுண்டேஷன் லோஷனையும் தொட்டு ஆறு வேளையாச்சு... என் நெத்தியிலே பொட்டு எங்கே வச்சிட்டுருக்கேன் பார்த்தீங்களா? அவங்க வீட்டு ஹால்லே ஒரு கண்ணாடி, டிவி ஸ்க்ரீன் அளவுக்கு மாட்டியிருக்கு. அதுக்கு முன்னாடி எப்பப் பார்த்தாலும் அந்த பாவாடை தாவணி, இல்லாட்டி, சோப்பைக் குழைச்சு முகத்துல தடவிட்டு அவங்க அப்பா...

நான் கண்ணாடி கேட்டதுக்கு உங்க மாப்பிள்ளை கையகலத்துக்கு ஒரு கண்ணாடியக் கொண்டு வந்து நீட்டறாரு... அதுல முகம் பார்த்தா பாதி கன்னம்தான் தெரியுது. 'ஒரு டிரஸ்ஸிங் டேபிள் கூட கிடையாதா உங்க வீட்டுல?'ன்னு கேட்டதுக்கு 'டைனிங் டேபிளே இப்பத்தான் ஆறு மாசம் முந்தி வாங்கினது... அதுவும் நான் வாங்கலை, எங்க அக்கா தான் வாங்கினா'ன்னு சொல்றாரு... இதைச் சொல்ல அவருக்கே வெட்காமாயில்லே...?''

படபடவெனப் பொரியும் மகளையே



இமைக்காமல் பார்த்த நரசிம்மன் இறுகிய குரலில் சொல்கிறார்.

''இந்தா... இந்த வீட்டுல உனக்கு இடமில்லாமல் போயிடல்ல. ஒரு அப்பன் உழைச்சு சம்பாதிச்சதையெல்லாம் கவர்மெண்ட் நோகாம எடுத்துட்டுப் போறதைப் பார்த்துட்டு சும்மாயிருக்கறதானா இரு. நான் வற்புறுத்தலை... ஆனா, ஒரு விஷயம்... அவங்க வாரிட்டுப் போனதுக்கு அப்புறம் மிச்சம் மீதி ஏதாவது இருந்தா அத்தனையையும் க்ளீனா அநாதை ஆசிரமங்களுக்கு எழுதிவச்சிடுவேன் புரியுதா?''

அவள் மெதுவாகப் படிந்து வருகிறாள்.

''இப்ப என்ன சொல்றீங்க...? அந்த வீட்டுல நான் இன்னும் எத்தனை நாள் இருக்கணும்?''

''ஆறு மாசம்... கரெக்டா ஆறேமாசம்! மாப்பிள்ளையை நம்ம ஸைடுக்கு இழுத்துட்டு வந்துடு... நீ 'நில்லு'ன்னா அவன் நிக்கணும், 'உட்காரு'ன்னா உட்காரணும்... உன்னால முடியும். கொஞ்ச நாள் பல்லைக் கடிச்சிட்டு அட்ஜஸ்ட் பண்ணிக்க... அப்புறம் நீ வேணா பார்த்துட்டேயிரு... மாப்பிள்ளையே வெட்கத்தை விட்டுச் சொல்லுவான்... 'மாமா, நான், தனி வீடு பார்த்துட்டுப் போகலாம்னு பார்க்கறேன்'னு...''

மறுநாள் காலையில், நரசிம்மன், மனைவியை அழைத்துச் சொல்கிறார்.

''லட்சுமி, நீயும் வா... சந்தியாவைக் கொண்டுபோய், அவ புருஷன் வீட்டுல விட்டுட்டு வரலாம்...''

அவள், வியப்பு தாளாமல் விழிகளை விரிக்கிறாள்...

''ஆமாண்டி... ஒரு பொண்ணு கிட்ட எப்படி பேசுறதுன்னு உனக்குத் தெரியாது... எனக்குத் தெரியும். புறப்படு. போற வழியில பூ , பழம், வெத்தலை, பாக்கு இன்னும் என்னென்ன சம்பிரதாயமோ, அதையெல்லாத்தையும் வாங்கிக்க...''

லட்சுமி கண்களில் தளும்பிய கண்ணீரைச் சுண்டிவிட்டபடி அவசர அவசரமாய், உட்பக்கம் ஓடுகிறாள்.

**வீ**ட்டு வாசலில் கார் வந்து நின்றதுமே ஓடி வந்தவள் வித்யாதான்.

சந்தியாவைப் பார்த்ததும் நெஞ்சில் பால் வார்த்தாற் போலிருக்கிறது அவளுக்கு.

முதல் நாள் - இவள் பிறந்த வீட்டுக்குக் கிளம்பிய போது - அவள் வீட்டிலில்லை; கோர்ட்டுக்குப் போயிருந்தாள்.

மாலை வீடு திரும்பியதும், அவள் முதன் முதலில் சந்தித்தது சீதாவின் அழுது உப்பிய முகத்தைத்தான்.

''என்னம்மா... என்னாச்சி?''

''அவ கிளம்பிப் போயிட்டாடி...''

''யாரு... சந்தியாவா...? எங்கே போனா?''

''பிறந்த வீட்டுக்கு... லல்லு எவ்வளவோ



தடுத்துப் பார்த்தா... அதுக்கு இங்கிலீஷ்லே என்னமோ கத்திட்டுப் போயிட்டா... மொத்தத்துல ஒண்ணு நிச்சயம், நேத்து ராத்திரி அவளுக்கும் முகுந்தனுக்கும் ஏதோ தகராறு நடந்திருக்கு... இந்த படவா நம்மகிட்ட சொல்லவே இல்லே... கல்யாணமாயிடுச்சு இல்லையா...? அவனவன் பெரிய மனுஷனா யிட்டதா மனசில நினைச்சாட்டிருக்கான்டி. இவன் ஏதாவது சொல்லியிருந்தாத் தானடி எனக்குத் தெரியும்? நான் பாட்டுக்கு வெள்ளிக்கிழமை, வீட்டுக்கு முதல்முதலா மருமக வந்திருக்காளேங்கிற சந்தோஷத்துல, 'தலையில கொஞ்சம் எண்ணெய் வச்சு விடறேன் வர்றியாம்மா'ன்னு யதார்த்தமா கேட்டேன்... 'தாட்பூட்'னு இங்கிலீஷ்லே கத்தினா... 'ஒண்ணுமே புரியல்லேன்னா சுவத்துல முட்டிக்குங்க'ன்னு சொல்லிட்டுப் போயிட்டா...''

சீதா வெகுளி... யாரிடமும் அதிர்ந்து பேசி அறியாதவள். 'திடுதிப்'பென நடந்த இந்த சம்பவத்தினால் மிகவும் அதிர்ந்து போயி ருந்தாள்.

முகுந்தன் ஆபீசிலிருந்து வந்ததும், ராகவன் தனது இயல்பான சாதுத் தன்மையை மறந்து இரைந்து மகனை அழைக்கிறார்.

''டேய்! என்னடாது...?''

''என்னப்பா...?''

''சந்தியா, கோவிச்சுட்டு பொறந்த வீட்டுக்குப் போயிட்டாளாமே? கல்யாணமான மூணாம் நாளே, உங்களுக்குள்ளே என்னடா

தகராறு...?''

அவன் ஒரு கணம் தயங்குகிறான்.

இதை அப்பாவிடம் எப்படி சொல்வது...?

சந்தியாவை அவனுக்கு சுத்தமாகப் பிடிக்காவிட்டால், அப்பா கேட்டதற்கு சடக்கென ஒரே வார்த்தையில், ''இவ எனக்கு சரிப்பட்டு வரமாட்டாப்பா...'' என்று சொல்லியிருப்பான்...

ஆனால் -

அவளைப் பிடித்திருக்கிறதே...!

முதன் முதலாக, கல்யாணக் கனவுகளுடன் அவன் பார்த்த புகைப்படம் அவளுடையது தான்.

அப்படியிருக்கையில் - அவளை விட்டுக் கொடுக்க, என்னதான் பெற்ற தந்தையா யிருந்தாலும் எப்படி மனசு வரும்...?

''என்னடா... நான் கேட்கிறேன்... நீ பாட்டுக்கு முழுக்கோழிய முழுங்கின மாதிரி முழிக்கறே... அவளைத் திட்டினியா.?''

''சேச்சே...''

''பின்னே...?''

''அப்பா... அவ - பார்க்கத்தான் வளர்ந்த பொண்ணாயிருக்காளே தவிர மனசளவில நம்ம லல்லுவை விட சின்னப் பொண்ணாயிருக்கா... பிறந்த வீட்டுல வசதியா இருந்து பழக்கப் பட்டுட்டா இல்லையா... 'இங்கே ஒரு டிரஸ்சிங் டேபிள் கூட கிடையாதா'ன்னு கேட்டா... 'டைனிங் டேபிளே இப்பத்தான் வாங்கியிருக்கோம்'னு



சொன்னேன்... அதுக்கு அவ என்னமோ சொன்னா. நான் பதிலுக்கு கொஞ்சம் எரிச்சலோட ஏதோ திட்டிட்டேன். அந்த கோபத்திலேதான் போயிட்டா போல இருக்கு...''

வித்யா பதறியபடி முகுந்தனின் முதுகில் குத்துகிறாள்.

''போடா... நீ அப்படி திட்டியிருக்கக் கூடாது. என்னதானிருந்தாலும் அம்மா அப்பாவை விட்டு நம்மையே நம்பி வந்திருக்கா. அவளோட தேவைய யார் கிட்டே போய் சொல்லுவா... ஒதிய மரம் மாதிரி வளர்ந்திருக்கிறாயே தவிர பெண்டாட்டி கிட்ட இதமா நாலு வார்த்தை பேசக்கூடத் தெரியல்லையே...''

''இனிமே வேணுமானா உன் கிட்ட பாடம் கத்துக்கறேன்.''

இவன் சூழ்நிலையின் இறுக்கத்தை தளர்த்த முயன்று தோற்க...

''ஏண்டா, ஒண்ணு வேணுமானா செய்யலாமா?''

வித்யா, ஆவலுடன் கேட்கிறாள்.

''என்ன?''

''பாங்க்லே என் கணக்குல ஆறு லட்சத்துக்கு கணக்கு இருக்கு. இது...' பல்லாவரம் வீட்டைக் கட்டறதுக்கும் லல்லுவோட கல்யாணத்துக்கும்தான் அதை செலவு பண்ணனும்னு வச்சிருந்தேன்... இப்ப வேணுமானா பல்லாவரம் வீடு கட்டி முடியற மட்டும் இதை விட இன்னும் கொஞ்சம்

வசதியான வீடா பார்த்துப் போகலாம்... அவ இஷ்டப்படி அவளுக்கு தனி பெட்ரூம், டிரஸ்ஸிங் டேபிள்... இதையெல்லாம் வாங்கிப் போட்டா அவளுக்கு திருப்தியா இருக்கும் இல்லையா?''

வித்யா இதைச் சொல்லும் போது முகுந்தன் அழுதே விட்டான்...

''வித்யா...''

அவன், அவளது இரு கன்னத்தையும் கையில் ஏந்திக் கொள்கிறான்.

''உன்னோட வாழ்க்கைக்கு விலையா கிடைச்ச பணத்தை வீடுகட்டவும், லல்லு கல்யாணத்துக்கும் உபயோகிச்சுக்கறதே சுயநலம். இதுல, என் பெண்டாட்டியோட அல்ப ஆசைகளுக்கெல்லாம் வேற தர்றேங்கறியே...? இன்னிக்கு வீடு வசதியா இல்லே. ஃபர்னிச்சர் இல்லேன்னு அவ சொல்றான்னு நாம வேற வீடு பார்த்து அவ கேட்கறதை வாங்கினோம்னு வச்சுக்க... நாளைக்கு அவ, ஏர்கண்டிஷன் இல்லேம்பா... இதை விடப் பெரிய பங்களா வேணும்னு சொல்லுவா... நாலு வேலைக்காரங்க வேணும்னு சொல்லுவா... அப்புறம் கார் - ஃபாரின் டூர்... இதுக்கெல்லாத்துக்கும் எங்கே போவே? எனக்குத் தெரியாம பிளாக் மணி எங்கேயாவது பதுக்கி வச்சிருக்கியா?''

வித்யா, 'குபுக்'கெனச் சிரித்து விட்டாள்.

இருந்தாலும், அன்றிரவு யாருக்குமே தூக்கமில்லை

பொழுது விடிந்ததும், சந்தியாவைப் போய்



அழைத்து வர வேண்டும் என்கிற துடிப்பு அனைவருக்குள்ளும் நீக்கமற நிறைந்திருந்தது.

இப்பொழுது அவளே வந்து விட்டாள் என்றால் எத்தனை ஆனந்தமாக இருக்கிறது?

''வாங்க... வாங்க...''

வித்யா முகமெல்லாம் புன்னகையாய் அவர்களை வரவேற்க...

நரசிம்மன்... நேரே ராகவன் எதிரில் போய் உட்காருகிறார்...

''மாப்பிள்ளை எங்கே?''

''குளிச்சிட்டிருக்கான்... இதோ இப்ப வந்திடுவான்.''

''அசட்டுப் பொண்ணு, ஒண்ணுமில்லாத விஷயத்துக்கு வந்துடுச்சி... லெப்ட் அண்ட் ரைட் வாங்கிட்டேன் சார்... எங்கே மாப்பிள்ளே... அவரைப் பார்த்து, ஒரு எக்ஸ்கியூஸ் கேட்டுட்டு கிளம்பிடறேன். நிறைய வேலை இருக்கு...''

முகுந்தன், ஈரத் துவாலையுடன் வெளியே வர - நரசிம்மன், மிகவும் அந்தரங்கமாய், அவனுடன் பேசுவது போல நெருங்கி நின்று அவனது இருகைகளையும் பிடித்துக் கொள்கிறார்.

''மாப்பிள்ளை - ஒண்ணும் மனசுல வச்சுக்கக் கூடாது. அவ ஒரு குழந்தை மாதிரி... இங்கே என்னமோ, கோவிச்சிட்டு வந்துட்டாளே தவிர அங்கே வந்து, ராத்திரி முழுக்க 'ஹோ'ன்னு அழுதுட்டா...''

லட்சுமியோ, சீதாவின் கால்களில் விழுந்து வணங்காத குறையாக மன்னிப்புக் கேட்டு விட்டுக் கிளம்புகிறாள்.

அந்த சூழ்நிலையில், இவர்களெதிரில் ஒரு குற்றவாளி போல நிற்கப் பிடிக்காதவளாய், சந்தியா, விடுவிடுவென மாடிக்குப் போகிறாள்.

அவள் பின்னாலேயே உள்ளே வந்த முகுந்தன், அவளது இடுப்பைப் பிடித்து, தன் பக்கம் இழுக்கிறான்.

''கோபம் இன்னும் தீரல்லையா...?''

அவள், அவனைப்பார்த்துச் சிரிக்கிறாள். அந்த நேரத்தில், இவளின் இந்தச் சிரிப்பு ஒன்றே போதுமானதாக இருக்கிறது அவனுக்கு -

''இப்பத்தான் எனக்கு நிம்மதியா இருக்கு சந்தியா...''

''.....''

''இன்னிக்கு ஆபீசுக்கு லீவு போட்டுட்டு உன்னை வந்து பார்க்கலாம்னு இருந்தேன். அப்பா, அம்மா, வித்யா எல்லோருமே தவிச்சுப் போயிட்டாங்க...''

''ஏன்... நீங்க தவிக்கலையா...?''

அவள் குறும்பாக அவனது முதுகில் கை வைத்துத் தள்ளுகிறாள்.

அந்த நேரம் பார்த்து, குளிப்பதற்காக மாடியேறி வந்த வித்யா, ஓசைப்படுத்தாமல் திரும்புகிறாள்...

''ஏன்மா... குளிக்கலையா...? கோர்ட்டுக்கு [illegible]



''குளிக்காம இன்னிக்கு ஒரு நாள் போனா என்னவாம். இன்னிக்கு கேஸே ஏழு மாசமா குளிக்காம இருக்கிற அப்பாவிப் பொண்ணோடது தான்... கனப் பொருத்தமாயிருக்கும்...''

வித்யா வாய் விட்டுச் சிரிக்கிறாள் - அடுத்த ஒரு மாதத்தில் அந்த வீட்டில் உண்டாகப் போகும் பிரளயத்தை உணராதவளாய்...

## 3

இந்த ஒரு மாதமும் வாழ்க்கை சலனமில்லாத நீரோடையாகத் தானிருக்கிறது...

சந்தியா, முகம் கழுவி தனது மேக்கப்பை ஆரம்பிக்கும் தருணத்தில், லல்லு கீழேயுள்ள பிரதான கண்ணாடியைத் தூக்கிக் கொண்டு மாடிக்கு ஓடி வருவாள்...

கண்ணாடியை, அந்த அறையின் சுவரில் சாத்த முடியாததால லல்லு, தன் கையிலேயே கெட்டியாகப் பிடித்துக் கொள்வாள்.

''சரியா இருக்கா அண்ணி...''

''உம்... இன்னும் கொஞ்சம் கீழே இறக்கு... இப்படி வெளிச்சத்துக்கு எதிரா திரும்பு...''

அவள் தன்னை அலங்கரித்து முடியும் வரையில் பள்ளிக் கூடத்துக்கு நேரமாவதையும் பொருட்படுத்தாமல் மகா பொறுமையாய் அந்தச் சிறுமி நிற்பதும்...

மாடிக்குளியலறையில் தண்ணீர் வரவில்லை என்றால், சந்தியா குளிக்க வேண்டுமே என்கிற பதைப்பில், வித்யா குடத்தையும், பக்கெட்டையும் சுமந்து கொண்டு மாடிக்கும் கீழுக்குமாய் மூச்சு வாங்க ஏறியிறங்குவதும்...

அவளுக்கு, படுக்கையில் காபி குடித்துத்தான் பழக்கம் என்பதால், சீதா - ராகவனுக்குத் தெரியாமல், தனது அருமை மருமகளுக்கு வித்யாவின் கையில் காபியைக் கொடுத்து விரட்டுவதும்...

நைட்டி என்கிற பெயரில் - அவள் அரைகுறையாய் ஏதோ ஒன்றை மாட்டிக்கொண்டு வீட்டில் வளையவரும் பொழுது அதைக் கண்டும் காணாதவராய் ராகவன் சமாளிப்பதும்...

மனைவியை சந்தோஷப்படுத்த வேண்டுமென்பதற்காகவே, மாலையில் சீக்கிரம் வீடு திரும்பும் முகுந்தன், அவளுடன் கடற்கரைக்கும், சினிமாவுக்கும், ஓரிருமுறை அவளின் பிறந்த வீட்டுக்கும், போய்வருவதும்...

அவளது இந்த மாற்றம், எல்லோரையும் குதூகலப்படுத்தினாலும், நரசிம்மனை ஒரு மடங்கு அதிகமாகவே சந்தோஷப்பட வைக்கிறது.

முகுந்தன், சந்தியாவுடன் வீட்டுக்கு வரும்பொழுதெல்லாம, அவனை அளவு கடந்த பிரியத்துடன் உபசரிக்கிறார் அவர்...

ஒரு முறை வெளிநாட்டுக் கைக்கடியாரம்



ஒன்றை அவனுக்குப் பரிசளிக்கிறார் அவர்...

அவன், புன்னகை மாறாமல், அப்படியே அவிழ்த்து மேஜை மீதே வைத்துவிட்டான்...

"கட்டிக்குங்க மாப்பிள்ளே..."

"மன்னிச்சுடுங்க சார். நான் அன்பளிப்பா எதையும் வாங்கறதில்லே..."

"வெளியிலே சரி. நமக்குள்ள என்ன...?"

"நீங்க கொடுத்து நான் மறுக்காம வாங்கிட்டிருக்கற பெரிய வெகுமதி சந்தியாதான். அதைவிட, வேற என்ன வேணும்...?"

நரசிம்மன் எதிர்பார்த்த நாட்களில் அவர் வீட்டில் எதுவும் சோதனை நடக்காததில், அவருக்குப் பரமசந்தோசம் .

"மாப்பிள்ளை கிட்ட நீ ஏதாவது சொல்லி வச்சிருக்கியாம்மா...?"

"இல்லை... ஆனா... ஒரு நாள் இதுபற்றிப் பேச்சுவந்தப்ப - 'சொந்த அம்மாவா இருந்தாக்கூட விட மாட்டேன்'னு அவர் சொன்னார்ப்பா..."

"நீ வேற... அதெல்லாம் சும்மாங்காட்டியும்... மாப்பிள்ளை தங்கமானவர். அதான், நம்ம வீட்டுல ரெய்டு நடக்காமப் பார்த்துக் கிட்டாரு... என்னயிருந்தாலும், எல்லாத்துலேயும் அவருக்கும் பங்கு உண்டு இல்லையா..."

நரசிம்மனின் சந்தோஷம் வெகு நாட்கள் நீடிக்கவில்லை. கழுத்து மட்டும் வந்த

ஆபத்து அகன்றுவிட்டது என்கிற சந்தோஷத்தில்... அவர் நிச்சிந்தையாக இருந்த போது - திடீரென ஒருநாள் விடிகாலைப்பொழுதில் நரசிம்மன் வீட்டு ஹால் சோபாவில் வந்தமருகிறான் முகுந்தன்.

லட்சுமிக்கு தாங்க முடியாத சந்தோஷம்...

''வாங்க... வாங்க... இன்னும் இவர் எழுந்திருக்கலே - இதோ எழுப்பறேன்... காபி சாப்பிடறீங்களா... இல்லே போர்ன்விடா, ஹார்லிக்ஸ்...?''

''எதுவும் வேண்டாம்மா... அவரை எழுப்புங்க...''

''இதோ...''

லட்சுமி, நாலு படிகளுக்கு ஒரு காலாய் வைத்து மாடிக்குப் பறக்கிறாள்.

''என்னங்க... எழுந்திருங்க... மாப்பிள்ளை வந்திருக்காரு...''

''என்னது. இந்த நேரத்துல...? மறுபடியும் ஏதாவது தகராறா...?''

உண்மையிலேயே நரசிம்மன் பதறிப் போகிறார்... பல் கூடத் துலக்காமல், கீழே ஓடி வருகிறார்.

''வாங்க மாப்பிள்ளே!''

''கொஞ்சம் இப்படி உட்காறீங்களா?''

அவர் உட்கார, அவன், தனது இரு கைகளையும் தட்டுகிறான்... வாசற்பக்கம் ஏழெட்டு தலைகள் எட்டிப் பார்க்கின்றன...

''உம்... நீங்க உள்ளே போய் தேடலை ஆரம்பிங்க...''



அவர்களிடம் சொன்ன அதே வேகத்தில், நரசிம்மன் பக்கம் திரும்பி, புன்னகையுடன் சொல்கிறான்...

''உங்க வீடு, ஆபீஸ், ஃபாக்டரி, உங்களோட அஸிஸ்டெண்ஸ் வீடு எல்லாத்தையும் ஒரே சமயத்துல சோதனை செய்ய சொல்லியிருக்கேன். கொஞ்சம் வெயிட் பண்ணுங்க... இந்தாப்பா, யாரங்கே...?''

முகுந்தன், தனது சக ஊழியர்களைப் பார்த்துக் கூறுகிறான்.

''இந்த வீட்டுல இருக்கற டெலிபோன் கனெக்ஷன எல்லாம் கட் பண்ணுங்க...''

அடுத்த சில மணி நேரங்களில் அந்த பங்களா அல்லோல கல்லோலப் படுகிறது...

ஒரு சின்ன குண்டூசி குத்தும் இடத்தைக் கூட விட்டு வைக்கவில்லை அவன்...

''மாப்பிள்ளை...''

நரசிம்மன், குரல் கம்ம அழைக்கிறார்...

''நோ... இப்ப நான், உங்க மாப்பிள்ளை இல்லே... மிஸ்டர் முகுந்தன்...''

''ஸாரி... மிஸ்டர் முகுந்தன், இப்படிக் கொஞ்சம் வர்றீங்களா...''

''என்ன?''

''உங்களுக்கே தெரியும். இத்தனை சொத்தும், என் பொண்ணுக்குத்தான்னு... என் பொண்ணுதுன்னா - அது உங்களுக்குத்தான் - சொந்த வீட்டையே இரண்டு பண்ணலாமா...?''

''இப்ப நீங்க என்னை மன்னிக்கணும். இப்ப

நான் பார்க்கற உத்தியோகத்துல மிஞ்சிப் போனா ரெண்டாயிரம் ரூபாய்க்கு மேல நான் பார்க்க முடியாது. ஆனா... எனக்கு இது போதும்... நாங்க கௌரவமான குடும்பத்துல வந்தவங்க...''

அன்று மாலைக்குள் விவரம் தெரிந்து, சந்தியா வானத்துக்கும் பூமிக்குமாய் குதிக்கிறாள்.

ஆனால்...

வீடு திரும்பிய தம்பியின் கைகளைப் பிடித்துக் குலுக்குகிறாள் வித்யா -

''உன்னை என்னமோன்னு நினைச்சேன் முகுந்த்... மாமனார் வீடுன்னும் பார்க்காம, ரெய்ட் பண்ணிட்டியே... வெரி குட்... எவ்வளவு தேறிச்சு...''

''முப்பது லட்சம் கரன்சியா... அதைத் தவிர கோல்ட் பிஸ்கட் - வெளியே வராத கணக்குகள்...''

சந்தியா, அவனெதிரில் இடுப்பில் கைகளை வைத்துக் கொண்டு கேட்கிறாள்.

''இப்ப திருப்தியாயிடுச்சு இல்லே?''

''சந்தியா...''

''போறும். என்னோட பேச வேண்டியதில்லை...''

விருட்டெனக் கண்களைத் துடைத்துக் கொண்டவள் சீதாவும், ராகவனும் எத்தனையோ செஞ்சியும் கேட்காமல் புறப்பட்டு விட்டாள்.



அன்று போனவள்தான் கிட்டத்தட்ட இரண்டு மாதங்களுக்கு மேலாகியும் வரவேயில்லை...

இந்த முறை, முகுந்தனும் போய் அழைத்து வருகிற உத்தேசத்தில் இல்லை...

''பாவம்... சின்னப் பொண்ணுதானே... அப்பாவுக்கு நேர்ந்த அவமானத்தை, தன்னோட அவமானமா நினைச்சுட்டிருக்கா... அவதான் ஒண்ணும தெரியாத குழந்தைன்னா நீயுமா...? போய் அவளை அழைச்சுட்டு வாடா...''

சீதாவின் வார்த்தைகளை, முதல் தடவையாக எதிர்த்துப் பேசுகிறான் முகுந்தன்.

சந்தியாவை அவனும் எத்தனையோ முறை தொலை பேசி மூலம் அழைத்து சமாதானப் படுத்த முயன்றிருக்கிறான். அவன் குரலைக் கேட்டாலே தலையில் அடிப்பது போல அவள்தான் ரிஸீவரை வைத்து விடுகிறாளே...

இதையெல்லாம் பெற்றவளிடம் சொல்ல முடியுமா...?

''இங்கே பாரும்மா... தானாப் போனவளுக்கு திரும்பி வரத் தெரியாதா என்ன... இஷ்டமிருந்தா வரட்டும்... இல்லாட்டா அங்கேயே இருக்கட்டும்...''

''என்னடா...?''

''பின்னே என்னம்மா... அவளுக்கு அவ அப்பாதான் ஒசத்தியின்னா போகட்டுமே...''

வித்யா, அவனையே இமைக்காமல்

பார்த்துக் கொண்டிருக்கிறாள். நெஞ்சில் சொல்லத் தெரியாத வேதனை...

'அது என்ன... இந்தக் குடும்பத்தின் சாபக்கேடா என்ன...

எனக்குத்தான் மணவாழ்க்கை ஒரு மாதிரியாய் வீணாயிற்று என்றால் - என் உயிருக்கும் மேலான முகுந்தனுக்குமா...?'

அன்றே அவள், சந்தியாவையும், நரசிம்மனையும் பார்த்து விட்டு வரத் தீர்மானிக்கிறாள்.

அதை முகுந்தனிடம் சொல்லவும் சொல்கிறாள்.

''நான் போய் சந்தியாவைப் பார்த்துட்டு வரலாம்னு இருக்கேன்...''

''தனியாவா?''

''ஏன்... போனா என்ன? அக்காவை தனியாப் போக விடக் கூடாதுங்கற அக்கறை இருந்தா, நீயும் கூட வா... ஐ ஹாவ் நோ அப்ஜக்ஷன்...''

''எனக்கு அவளைப் பார்க்கணும்னு அவசியமில்லே...''

''எனக்கு இருக்கே! நான் பார்த்து நாலு வார்த்தையாவது கேட்டாகணும்...'' வித்யா சிரிக்கிறாள்.

''என்ன கேட்கப் போறே வித்தா...?''

'' 'உங்க அப்பா பண்ணின தப்புக்காகத் தான் என் தம்பி அவர் வீட்டை முற்றுகை யிட்டான்... சரி... அதுக்காக இப்படியொரு உத்தமப் புருஷன் கிடைச்சிருக்காரேன்னு சந்தோஷப்படறதை விட்டுட்டு, புருஷனைப்



பிரிஞ்சு, பொறந்த வீட்டுலேயே இருக்கியே...? நியாயமான்னு கேட்பேன்...''

''கேட்டுப் பிரயோசனமில்லே வித்து...''

''கேட்டுத்தான் பார்த்துடறேனே...''

''நீ பிடிவாதக்காரி. சொன்னாக் கேட்க மாட்டியே...''

அவன் அலுத்துக் கொண்டே கிளம்புகிறான்.

அத்தனை அலுப்பினூடும், உள்ளூர ஒரு சின்ன சபலம் இல்லாமல் இல்லை,

அவளைப் பொறுத்தமட்டும் நல்ல பெண்தான்; அப்பாக்காரர் ஊரைக் கொள்ளையடிப்பவராக இருந்தால் - பாவம், அவள் என்ன செய்வாள்...

முகுந்தனின் நினைப்பில் - அன்று மாலையே மண் விழுந்து விட்டதே!

வித்யாவுடன், அவன் நரசிம்மன் வீட்டுக்கு மாலை ஐந்து மணிக்கே போய் விட்டான்.

லட்சுமிதான் அவர்களை வரவேற்று, காபி கலந்து வர ஓடுகிறாள்.

என்னயிருந்தாலும் ஒரு தாயல்லவா...!

பெண் நல்லபடியாக வாழ வேண்டுமென்பதைத் தவிர வேறு சிந்தனையே இல்லாதவளாயிற்றே!

''சந்தியா இல்லையா...?''

வித்யா, தன் கையிலிருந்த பூப்பொட்டலத்தை லட்சுமியின் கையில் கொடுத்து விட்டு கேட்கிறாள்.

''வெளியில் போயிருக்கா... இப்ப வர்ற

நேரம்தான்.''

தயங்கித் தயங்கிச் சொன்னவன், பிறகு என்ன தோன்றியதோ, கண் கலங்க, இரு கைகளையும் கூப்பியபடி கெஞ்சும் குரலில் சொல்கிறாள்.

''அவ குழந்தை தான். எந்தப் பாதையிலே போயிட்டிருக்கோம்னு தெரியாமலேயே போயிட்டிருக்கா... அவ அப்பாவுக்கு முரட்டுத் தனமும், முன்கோபமும்தான் இருக்கே தவிர பெண்ணோட எதிர்காலத்துல அந்த அளவுக்கு அக்கறையில்லே. நிச்சயமா, தன்னோட சுயநலத்தாலே, சந்தியாவோட எதிர்காலத்தையே குட்டிச் சுவராக்கப் போறார். எனக்கு பயம்மா இருக்கு... தயவு செஞ்சு அவளை, உங்க கூட அழைச்சுட்டுப் போயிடுங்க...''

''நாங்களும் அதுக்காகத்தாம்மா வந்திருக்கோம்... எத்தனை நேரமானாலும் அவளைப் பார்த்துட்டுதான் போகப் போறோம்...'' வித்யா சொன்னாள்.

முகுந்தன் ஒன்றுமே பேசவில்லை...

அந்தப் பெரிய ஹாலில் நடுநாயகமாய் சுவரில் பதித்திருந்த சந்தியாவின் மிகப்பெரிய புகைப்படத்தையே பார்த்துக் கொண்டு உட்கார்ந்திருக்கிறான்.

கையில் வெள்ளிக் கோப்பையுடன் மிடுக்காக அவள் நிற்கும் தோற்றம்...

மாநில அளவில் முதல் மாணவியாக வந்ததற்கான பரிசுடன் எடுத்த புகைப்படம்...

படிப்பில் முதலாவதாக வந்தவளுக்கு,



வாழ்க்கையில் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்று தெரியவில்லையே...

இரவு எட்டு மணிவரை...

முள் மீது உட்கார்ந்திருப்பது போன்ற அவஸ்தை முகுந்தனுக்கு...

எட்டு மணி சுமாருக்கு சந்தியா வந்தாள்... கூடவே ஆண்களும் பெண்களுமாய் நாலைந்து பேர்...

ஹாலில் கணவனைப் பார்த்ததும் சற்று தயங்குகிறாள் அவள்...

''சந்தியா... யாரு வந்திருக்காங்க பாரு...''

லட்சுமிதான் பரபரப்புடன் சொல்கிறாள்...

''ஹாய்...''

சின்னதாய் ஒரு கையசைப்பு... வித்யாவைக் கண்டு கொள்ளவே இல்லை.

''ஹேய்... எல்லாரும் ஸிட் அவுட்லே போய் உட்கார்ந்து கார்ட்ஸை கலைச்சுப் போடுங்க... இதோவர்றேன்!''

வேகமாய் உள்ளே போனவள், உடை மாற்றிக் கொண்டு, பால்கனியில் வந்து உட்காருகிறாள். அடுத்து சில நிமிடங்களில் சீட்டாட்டம் மிக மும்முரமாய் தொடங்குகிறது.

மகளின் செய்கை லட்சுமியின் முகத்தை சிவக்க வைக்க...

இந்த நேரத்தில்தான் - வாசலில் கார் வந்து நிற்கிறது... நரசிம்மன் இறங்கி வருகிறார்...

முகுந்தனைப் பார்த்ததுமே அவரது அடர்ந்த புருவம் சுருங்குகிறது...

''எங்கே இப்படி...? பெண்டாட்டிய பத்தின

நினைப்பு கூட இருக்கா என்ன...?''

''எனக்கு இருக்கு. முதல்லே உங்க பொண்ணுக்கு என்னை நினைவிருக்கான்னு கேளுங்க...''

முகுந்தனின் குரலிலும் சீற்றம் எட்டிப் பார்க்கிறது.

வித்யா, விவகாரம் முற்றி விடக்கூடாது என்கிற எண்ணத்தில், முகுந்தனை அடக்கி விட்டுப் பேசுகிறாள்.

''சார்... உங்க பொண்ணை அழைச்சுட்டுப் போகணும்னுதான் நாங்க வந்திருக்கோம். கல்யாணமானதிலேயிருந்து இத்தனை நாள்லே ஒரேயொரு மாசம்தான் அவங்க ரெண்டு பேரும் சேர்ந்து வாழ்ந்திருக்காங்க. எங்க அம்மாவும், அப்பாவும் கலங்கிப்போய், தவிச்சிட்டிருக்காங்க - இப்பவே அனுப்பி வையுங்க... அழைச்சுட்டுப் போக நாங்க காத்திட்டிருக்கோம்...''

நரசிம்மன், அவளை செங்குத்தாய் ஒரு பார்வை பார்க்கிறார்...

"இவ்வளவு பேசறியே... கல்யாணத்தும்போதே கேட்கணும்னு நினைச்சேன்... நீ யாரு?''

''நான்... நானா... முகுந்தனோட அக்கா... கல்யாண மண்டபத்துல உங்க பொண்ணு கழுத்துல நாத்தி முடியா, மூணாவது முடிச்சுப் போட்டவ நான்தான். இதை உரிமைக்காக இங்கே சொல்லிக்கலே... மூணாவது முடிச்சுப் போடறதோட, நாத்தனாரோட கடமை தீர்ந்து போச்சுன்னு நினைக்கறவ இல்லே நான்... இந்தக் கல்யாணம் நல்ல விதமான



வாழ்க்கைய என் தம்பிக்கு கொடுக்கணும்கற அக்கறையோட சொல்றேன்...''

''ச்சீ... அநாவசியமாப் பேசி, உன் லாயர் புத்திய காமிக்காதே. எங்க வீட்டு மாப்பிள்ளைக்கு நீ என்ன உறவு முறை... அதைச் சொல்லு போதும்... அக்கான்னா பெரியப்பா மகளா? அம்மாவழி உறவா...? இல்லை... உங்க அம்மாவுக்கும் மாப்பிள்ளையோட அப்பாவுக்கும் உறவா...?

''ஷட் அப்'' முகுந்தன் சீறி வெடிக்கிறான்.

''உங்க பொண்ணு உங்க வீட்டோட இருக்கட்டும். எனக்கு கவலையில்லே. இனிமே, அவளுக்கும், எனக்கும் எந்த வித சம்பந்தமும் இல்லே... விவாகரத்துக்கு வழக்குப் போடப் போறேன். கோர்ட்லே மீட் பண்ணி கையெழுத்துப் போட்டு இந்த பந்தத்தை உதறிட்டு போகச் சொல்லுங்க. வித்யா, வா போகலாம். தரம் கெட்ட மனுஷங்களோட நமக்கென்ன பேச்சு...''

''முகுந்தா... ப்ளீஸ், நான் சொல்றதைக் கேளு...''

''போதும் வித்யா... இத்தனை நாளும் உங்க எல்லார் பேச்சையும் கேட்டதோட வினை - நான் இப்ப அனுபவிக்கறேன்...''

அவன், வித்யாவின் கையைப் பிடித்து இழுக்கிறான்.

நரசிம்மனோ, எகத்தாளமாய் சிரிக்கிறார்.

''விவாகரத்து - அத்தனை சுலபமான விஷயமில்லே மாப்பிள்ளே. எனக்கும் கொஞ்சம் சட்டம் தெரியும். நீங்க மாத்திரம்

விவாகரத்துக்கு தயாரா இருந்தாப் போதுமா...? என் மகளுக்கு அதுலே இஷ்டமில்லே... என்ன செய்வீங்களோ செஞ்சுக்குங்க..."

இப்பொழுது வித்யாவிற்கே முகம் சிவக்கிறது.

"இந்த வழியும் போக விடமாட்டேன், அந்த வழியும் போகவிட மாட்டேன்னா என்ன சார் அர்த்தம்? விவாகரத்துக்கு இஷ்டமில்லைன்னா, உங்க பொண்ணு எங்க வீட்டுக்கு வர வேண்டியது தானே?"

நரசிம்மன், அவளை உற்றுப் பார்த்தபடி சொல்கிறார்.

"என் பொண்ணுக்கு, தன் புருஷன் கூட வாழத்தான் ஆசை. ஆனா அந்த வீட்டுல இல்லே... இந்த ஒரு மாசத்துல - அங்கே, அக்காவுக்கும் தம்பிக்கும் என்ன உறவுங் கறதையெல்லாம் கண் கூடாப் பார்த்துட்டா. இனிமே அவ, மாப்பிள்ளையோட வாழறதா யிருந்தா - தனிக்குடித்தனம்தான்..."

"ஸாரி... அந்த ஆசையை மறந்துடச் சொல்லுங்க. நான் வரேன்..." என்கிறான் முகுந்தன்.

அவன், மலைத்துப் போய் நிற்கும் வித்யாவையும் அழைத்துக் கொண்டு வெளியேறுகிறான்.

**செ**ய்தியைக் கேட்டதும் ஹோவென அழுகிறாள் சீதா. முகுந்தன், தாயை எப்படி சமாதனாப்படுத்துவது என்றே தெரியாமல்



தவிக்கிறான்.

"கிடக்கான். விடுடி... அவன் பொண்ணு அவன் வீட்டோட இருந்தா அவனுக்குத்தான் நஷ்டமே தவிர நமக்கில்லேடி..."

ராகவன் கூடத்தில் குறுக்கும் நெடுக்குமாய் நடந்த படியே கூறுகிறார்.

லல்லுவுக்கு எல்லாமே பிரமிப்பாக இருக்கிறது...

'இந்த வீட்டில் அண்ணிக்கு என்ன குறை...?'

யோசித்து யோசித்து மூளை குழம்புகிறது அந்த சிறுமிக்கு.

முகுந்தன் வித்யாவை அழைத்துக் கூறுகிறான்.

"இந்த கேஸை உன் கிட்டதான் நான் ஒப்படைக்கப் போகிறேன்... எனக்கு அவகிட்டேயிருந்து டைவர்ஸுக்கு கையெழுத்து வாங்கித் தரவேண்டியது உன் பொறுப்பு..."

வித்யா, முகுந்தனை ஆழமாய் பார்க்கிறாள்.

"இது வரைக்கும் எத்தனையோ கொடுமைக்கார கணவர்கள் கிட்டயிருந்து எத்தனையோ அப்பாவி மனைவிகளுக்கு விடுதலை வாங்கித் தந்திருக்கேன். ஆனா... ஆனா... ஒரு தகப்பனோட கர்வத்துக்காக அடங்கியிருக்கிற அசட்டுப் பொண்ணையும், அன்பைத் தவிர வேற எதுவுமே தெரியாத அப்பாவிப் புருஷனையும் நான் பிரிக்க மாட்டேன் முகுந்தன்..."

''எனக்கு இந்த கல்யாணத்துலேயிருந்து விடுதலை கிடைக்கறதுதான் நிம்மதியின்னு நான் நினைக்கறேன்...''

''இது பொய்யான நிம்மதி முகுந்தா... பின்னாலே ரொம்ப வருத்தப்படுவே... அது மட்டுமில்லே. நீ விவாகரத்துக்காக வழக்கு கொடுத்தா அது ஜெயிக்காது...''

''ஏன்...?''

''உன் வழக்குல நியாயமில்லே, உன் பெண்டாட்டி உன்கூட வாழ ஆசைப்படறா. ஆனா, எங்க கூட சேர்ந்து இருக்க அவளுக்குப் பிடிக்கலை. இந்த அல்ப காரணத்துக்காக - எந்த நீதிபதியும் உன் பக்கம் தீர்ப்பு சொல்ல மாட்டார்...''

முகுந்தன் எரிச்சலுடன் தாயைப் பார்த்துக் கூறுகிறான்.

''பாரும்மா, இவ சொல்றதை...''

''அவ சொல்றது இருக்கட்டும். நானே இதைத்தான் சொல்லுவேன் முகுந்தா... சந்தியாவுக்கு, எங்களோடு சேர்ந்து வாழ இஷ்டமில்லைன்னா நீ அவளை அழைச்சுட்டுத் தனியாப் போறதுதான் உத்தமம்...''

''நோ... நான் தனியாப் போக மாட்டேன். அவளுக்கென்று சில அபிப்பிராயங்கள் இருக்கற மாதிரி, எனக்கும் இருக்கு. இத்தனை வருஷமா என்னை வளர்த்து ஆளாக்கினது அப்பாவும் நீங்களும் வித்யாவும்தான்... என் கிட்ட பாசத்தைப் பொழிஞ்சது லல்லுவும்



வித்யாவும்தான். உங்களையெல்லாம் விட்டுட்டு, நான் அவ கூட தனியாப் போய் வாழற துங்கறது நடக்காத காரியம். அப்படி வாழறதா இருந்தா அவ, தன் புருஷனோட வாழற சுகத்தைப் பெற மாட்டா... அவ்வளவு தான்...''

வித்யா, புடவைத் தலைப்பை இழுத்து செருகிக் கொண்டு அவனெதிரில் வந்து நிற்கிறாள்.

''இந்தாடா... இப்ப என்ன சொல்றே? அவளை டைவர்ஸ் பண்ணிட்டு வேற கல்யாணம் பண்ணிக்கப் போறியா?''

''நான் அப்படி சொன்னேனா? அவ கிட்டயிருந்து விலகினாப் போதும் எனக்கு...''

''அவ்வளவுதானே... வேற வக்கீலப் போய் பாரு... போ...''

''நிஜமாத்தான் சொல்றியா...?''

''சத்தியமா சொல்றேன். இந்த கேஸை நான் எடுக்க மாட்டேன். மாட்டேன், நீங்க ரெண்டு பேரும் சேர்ந்து வாழறதைப் பார்க்கத்தான் நானும், அம்மாவும் ஆசைப் படுவோமே தவிர - கோர்ட்டுலே குடுமியைப் பிடிச்சிட்டு நிக்கறதைப்பார்க்க இல்லே...''

''உன்னை அந்த மனுஷன் எவ்வளவு கேவலமாப் பேசினான்... கேட்டுட்டுத்தானே இருந்தே... அத்தனைக்கும் காரணம் யாரு...? இவ சொல்லித்தானே, இவ அப்பன் அப்படிப் பேசினான்...?''

இதைச் சொல்லும்போதே, தான் ஒரு ஆண்பிள்ளை என்கிற நினைப்பு கூட மரத்துப்

போனவனாய் விசும்புகிறான் அவன்.

''சரி... அவர் சொன்னார் இல்லே... இப்ப இந்த கேஸை நானே எடுத்துக்கிட்டா - எரியற நெருப்பிலே எண்ணெயவிட்ட மாதிரி ஆகாதா...? அதுக்காக சொல்றதா வேணுமானாலும் வச்சுக்க. நீ அவளை அழைச்சுட்டு தனியா குடித்தனம் போறதுதான் நல்லது. நாளாக ஆக, தானா நல்லது கெட்டதைப் புரிஞ்சுக்கக்கூடிய பக்குவம் அவளுக்கு வந்துடும்...''

''இவளுக்கு பக்குவம் வர்ற வரைக்கும், இவளோட நாய்குட்டியா இருக்க நான் தயாரா இல்லே. காசை விட்டெறிஞ்சா ஆயிரம் வக்கீல்...''

அவன், முத்து முத்தாய் வியர்த்த முகத்தை, துடைக்க கூட தோன்றதவனாய் அந்த இடத்தை விட்டு நகர...

வித்யா, அவசரமாய் சோற்றை அள்ளி, தட்டில் போட்டுக் கொண்டு சாப்பிட உட்காருகிறாள்...

அத்தனை நேரம் வரையில், முகுந்தனிடம் பேசிய போது இருந்த தைரியம் முழுவதும் கரைந்து, துக்கம் பெருக்கெடுக்கிறது. குமுறிக் குமுறி அழுகிறாள்...

ராகவன், அவள் பக்கத்தில் வந்து அமர்ந்து வாஞ்சையுடன் அவளது தோளைத் தட்டிக் கொடுக்கிறார்.

''எங்களுக்கெல்லாம் தைரியம் சொல்ல வேண்டிய நீயே இப்படி உடைஞ்சு போகலாமா வித்யா...?''



''இல்லே... அவனையும், லல்லுவையும் சுத்தி நான் பெரிய கற்பனைக் கோட்டையே கட்டி வச்சுட்டேன் அங்கிள்... பாருங்க... ஆபீசுக்குப் போகணும்னா - அவன் ஸ்கூட்டரை வெளியே எடுத்துட்டானான்னா பார்க்கத் தோணாது. சாயந்திரம், கோர்ட் வாசல்லே, முகுந்தன் எங்கே நிக்கறான்னுதான் கண்ணு தேடறது. அவனோ, லல்லுவோ இல்லாம, ஒரு ஐஸ்க்ரீமைக் கூட என்னால ரசிச்சு சாப்பிட முடியாது... இந்தப் பாசத்தை இப்படி தப்பா எடை போட்டுட்டாங்களேன்னு நினைக்கறப்ப... அங்கிள், என்னை ஏன், இந்தக் குடும்பத்துலே ஒருத்தியா வளர்த்தீங்க... தனியா ஹாஸ்டல்லே வளர்த்திருந்தா, இந்தப் பாசமும், நேசமும் தெரிஞ்சேயிருக்காது பாருங்க...''

அவள் அழுவதைக் காணச் சகியாத சீதாவும் அழுகிறாள்.

அடுத்த சில நாட்களிலேயே...

கோர்ட்டில் -

வித்யாவின் ஜூனியர் சுமித்ரா...

''குட் மார்னிங் சுமி...''

''குட் மார்னிங் மேடம்...! உங்ககிட்ட ஒரு முக்கியமான விஷயம் பேசணும் மேடம்...''

''சொல்லு...''

''இங்கே வேண்டாம். ரூம்லே போய்...''

அவள் சொல்லிய விஷயம், வித்யாவின் முகத்தில் மேலும் வருத்தத்தைப் படரச் செய்கிறது.

''மிஸ்டர் நரசிம்மன், தன் பொண்ணோட கேஸை என்கிட்ட ஒப்படைக்க விரும்பறார் மேடம்...''

''நரசிம்மன்...?''

''உங்க பிரதரோட மாமனார்.''

''ஓ... என்ன செய்யப் போறே சுமி...?''

''அவர் எழுதியிருக்கறதை அப்படியே படிக்கறேன்...''

''வேண்டாம். விஷயத்தை மட்டும் சொல்லு போதும்...''

''நேத்து, உங்க பிரதரோட லாயர் சீனுவாசன் - தன் கிளையண்ட்டுக்கு டைவர்ஸ் தேவைன்னு சந்தியாவுக்கு, நோட்டீஸ் அனுப்பியிருக்காரு... அதுக்குப் பதிலாத்தான் என் மூலமா, மிஸ்டர் முகுந்தனுக்கு பதில் நோட்டீஸ் விடச் சொல்றாரு... அவர், தன் பதில்லே சொல்லியிருக்கற காரணங்கள் ரொம்ப மோசமாயிருக்கு மேடம்...''

''.....''

''தன்னோட பொண்ணுக்கு புருஷனோட வாழப் பிரியம் தான்னும், ஆனா புருஷனுக்குத்தான் அந்த குடும்பத்தை விட்டு வா இஷ்டமில்லையின்னும் அதற்கு காரணம் - அவருக்கும் அவர் வீட்டுலே அவரோட சகோதரிங்கற போலியான போர்வையில இருக்கற மிஸ்... மிஸ்...''

''ஏன் தயங்கறே சுமி? அவருக்கும், அவரோட சகோதரிங்கற போலியான போர்வையில இருக்கற மிஸ் வித்யாவுக்கும் கள்ளத் தொடர்பு இருக்கறதாக



எழுதியிருக்காரா...?''

வித்யா, துளிக் கூடச் சலனமில்லாமல் கேட்கிறாள். சுமித்ரா, கலக்கத்துடன் தலை குனிகிறாள்.

''உம்... ப்ரொஸீட்.''

''இந்த தொடர்புக்கு அவரோட அப்பா, அம்மாவும் உடந்தையின்னு எழுதியிருக்கார் மேடம்... அதனால தன் மருமகன் தனியே விலகி வந்து தன் மகளோட தனி வீட்டுல வாழணும்னு கேட்டிருக்கார்... அவருக்கு நான் உங்க ஜூனியர்ங்கற விஷயம் தெரியாதுன்னு நினைக்கறேன்...''

''தெரிஞ்சாலும் கவலையில்லே சுமி. நீ இந்த கேஸை எடுத்துக்க. நான் உனக்கு தேவையான லா பாயின்ட்ஸ் எடுத்து தர்றேன். எப்படியோ இந்த கேஸை ஸக்ஸஸ் ஃபுல்லா முடிச்சுக்கொடு... போதும்...''

வித்யா, சுமித்ராவின் இரு கைகளையும் பிடித்துக் கொள்கிறாள்.

''உங்களை எனக்கு எத்தனையோ வருஷமா தெரியும் மேடம்... உங்க வீட்டுல இருக்கற ஒவ்வொரு ஜீவனையும் எனக்குத் தெரியும்... எப்படி இந்த கேஸை...?''

''என்னைப் பத்தி நல்லாத் தெரிஞ்ச நீ தான் இந்த கேஸை எடுத்துக்கணும் சுமி...''

இதற்குப்பின் கிட்டத்தட்ட ஆறுமாதங்களுக்கு மேல், இந்த வழக்கு இழுத்துக்கொண்டு போயிற்று...

இரவுபகல் பாராமல் - வித்யா, இந்த வழக்குக்கான, சட்ட ஆலோசனைகளை சுமித்ராவுக்கு சொல்லித் தருகிறாள்.

வழக்கமாய், நடுக் கூடத்திலும்

சமையலறையிலும், கிணற்றடியிலும் தனது ஜூனியருடன் வழக்குகளை அலசுபவள் - இப்பொழுதெல்லாம் சுமித்ராவின் வீட்டுக்கே, போய் இது பற்றிப் பேசி விட்டு, இரவு - நேரம் கழித்து வீட்டுக்கு வருகிறாள்.

எல்லாம் எத்தனை நாளைக்கு?

அன்று கோர்ட்டில் தீர்ப்பு சொல்லி விட்டார்கள்.

**''முகுந்தனின் தந்தை இன்னமும் உத்தியோகத்தில் இருப்பதால் - அவரது மனைவியையும், மகளையும் காப்பாற்ற வேண்டியது அவருடைய கடமை தானே தவிர முகுந்தனுடையது இல்லை. முகுந்தன், தனது விவாகரத்துக்காக குறிப்பிட்டிருந்த காரணம் செல்லுபடி யாகாது... அவரது மனைவி, அவருடன் வாழ விரும்புவதால் - தனியே - மனைவி யின் விருப்பப்படி வாழ வேண்டு மென நீதிமன்றம் கட்டளையிடுகிறது...''**

கண்களைத் துடைத்துக் கொண்டு வெளியே வந்த வித்யா, சுமித்ராவின் கையைப் பிடித்துக் குலுக்குகிறாள். ''கங்கிராஜுலேஷன்ஸ் சுமி... நமக்குள்ளே இந்த கேஸுக்கான பேச்சு வார்த்தை இருந்தது வெளியில் யாருக்கும் தெரியவேண்டாம் சுமி...''

முகுந்தன் கோர்ட்டை விட்டு வெளியே வந்ததுமே, நரசிம்மன், தனது கார் கதவைத் திறந்து வைத்துக் கொண்டு, பதவிசாகப் புன்னகைக்கிறார் '' - வாங்க மாப்பிள்ளே...''

''நெவர்... என் குடும்பத்தை விட்டுத்தான்



உங்களாலே என்னைப் பிரிக்க முடியுமே தவிர - உங்க வீட்டுக்கு என்னைக் கொண்டு போக முடியாது... எனக்கும் ரெண்டாயிரம் ரூபாய் பக்கத்துக்கு சம்பளம் வர்றது. உங்களை மாதிரி - ஏர்க்கண்டிஷன்ட் பெட்ரூம் உங்க மகளுக்கு அமைச்சுத் தாமுடியலைன்னாலும் - ஒரு ஃபேன் போட்ட பெட்ரூம் இருக்கும். பட் ஒன் திங்... உங்க வீடு மாதிரி சமையலுக்கு ஒரு ஆள், கால்பிடிச்சுவிட ஒரு ஆளுன்னு என்னாலே வைக்க முடியாது... அவதான் எல்லாத்தையும் கவனிச்சுக்கணும்... ஓகே... நான் வீடு பார்த்துட்டு சொல்றேன். அவளை அனுப்பி வையுங்க... ஞாபகம் வச்சுக்குங்க... அவள்னா... அவ மாத்திரம்தான். கட்டின புடவையோட வரணும்... சீர் - செனத்தி - கூட ஒரு ஆள், இப்படி எதையாவது அனுப்பி வச்சீங்க... அப்படியே திருப்பி அனுப்பிடு வேன்... அதே சமயத்துல இன்னொண்ணும் சொல்ல விரும்பறேன். பொண்ணைப் பார்க்கணும்னு நீங்களோ உங்க மனைவியோ, யாரும் அந்த வீட்டுக்கு வரக்கூடாது... எப்ப எங்க வீட்டு மனுஷங்களை அவ ஒதுக்கி னாளோ - அப்பவே, நானும் உங்க எல்லாரையும் ஒதுக்கிட்டேன்...''

அவன் 'விருட்'டெனக் கிளம்பி விட்டான்...

இதற்குப் பின் பதினைந்து இருபது நாட்கள் கழித்து, ஒரு நாள் - திருவல்லிக் கேணியில் ஒரு போர்ஷன் பார்த்து, வீட்டுக்கு வேண்டிய சாமான்களையும் வாங்கிப் போட்டு

விட்டு, சந்தியாவுக்கு போன் செய்தான்.

''வீடு பார்த்தாச்சு. புறப்பட்டு வா...''

''எங்கே?''

''டிரிப்ளிகேன்லே... ஒரு போர்ஷன்... நானூறு ரூபா வாடகை... இதுக்கு மேல என்னால கொடுக்க முடியாது...''

நரசிம்மன் செய்வதறியாது கையைப் பிசைகிறார்.

சந்தியாவோ, ஒப்பாரி வைக்காத குறை.

லட்சுமிக்கு மட்டும் உள்ளூர ஒருவித திருப்தி...

சந்தியா, முகுந்தனுடன் வாழ வந்த இந்த சில மாதங்களில்... அடியோடு மாறி விட்டாள் என்றே சொல்ல வேண்டும்... இந்த வீட்டில் எல்லாக் காரியமும் அவளேதான் கவனித்துக் கொள்ள வேண்டியிருக்கிறது. ஆனால் முகுந்தனிடமிருந்து அன்பான, ஒரு புன்சிரிப்புகூட இல்லை.

அன்றுதான் காய்கறி மார்க்கட்டில், சுமித்ராவை சந்திக்கிறாள் அவள்.

''இப்ப எப்படியிருக்கே சந்தியா...?''

''என்ன வாழுது...? என்னைக் கொண்டு வந்து இங்கே ஜெயில்லே அடைக்கற மாதிரி அடைச்சு வச்சிருக்காரு. இன்னமும் அவகிட்ட தொடர்பு இருக்கு போல இருக்கு. ராத்திரி பத்து மணிக்கு குறைஞ்சு வீட்டுக்கு வர்றது கிடையாது...''

சுமித்ரா ஏளனமாகச் சிரிக்கிறாள்.

''அன்பை கேஸ் போட்டு பெற முடியாது சந்தியா... வித்யா அந்தக் குடும்பத்துக்கு மூத்த



பொண் மாதிரி. உனக்குத் தெரியுமா... கேஸ் உன் பக்கம் ஜெயிக்க, அவதான் எனக்கு லா பாயிண்ட்ஸ் எல்லாம் எடுத்துக் கொடுத்து கோர்ட்லே எப்படி பேசினா ஜெயிக்கலாம்னு சொல்லிக் கொடுத்தா... டு யூ நோ? ஷீ இஸ் மை சீனியர்.''

விக்கித்து நின்று விட்டாள் சந்தியா...

''இனிமேலாவது நல்லவங்களைப் புரிஞ்சுக் கப்பாரு... உன்னாலே முடியாதா... குறைஞ்ச பட்சம் இந்த மாதிரி திட்டாமலாவது இரு...''

அன்றிரவு வழக்கம் போல பத்து மணிக்கு வீட்டுக்கு வந்த முகுந்தன் சமையலறை யிலிருந்து வந்த பேச்சுக் குரல் கேட்டு திகைத்து நிற்கிறான்.

''வாடா... இப்பத்தான் வீட்டுக்கு வர வழி தெரிஞ்சுதா? சின்னஞ்சிறுசை தனியா விட்டுட்டு... ராத்திரி இத்தனை நேரம் எங்கே சுத்தினே...? தட்டிக் கேட்க ஆளே இல்லேன்னு நினைச்சியா...? நாளைக்கே வீட்டைக் காலி பண்ணிட்டு, நம்ம வீட்டுக்கு வந்து சேரு...''

அந்தக் குரல்...

சந்தேகமேயில்லை... வித்யாவினுடையது தான்.

முகுந்தன் சந்தியாவைப் பார்க்க, அவள், கன்னத்தில் வழியும் கண்ணீரைத் துடைத்த படி, வித்யாவின் முதுகுக்குப் பின் ஒளிகிறாள்.

(முற்றும்)